# பாதுகாவலன்

PATHUKAVALAN

பாஸ்கா

சிறப்பு மலர்

07–04–1995

மலர்: 121


இதழ்: 7

விலை ரூபா 10-00


✳ கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண் ✳

# விலங்கினை உடைத்திடவா!

அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்து விடு,
அழுத்தியிறுத்தும் நுகத்தடிகளை இறக்கு,
ஒடுக்கப்பட்டவர்களை உரிமை மக்களாய் விடுதலை செய்,
சுமையானதையெல்லாம் உடைத்தெறி;
(இசை. 58 : 6)




பசித்தவனுக்கு உன் அப்பத்தைப் பகிர்ந்து கொடு,
ஏழைகளுக்கும் அந்நியருக்கும் உன் வீட்டில் தங்குவதற்கு
இடம் கொடு
ஆடையில்லாதவனைக் கண்டால் அவனைப் போர்த்து,
உன் இனத்தாளை அவமதிக்காதே,
இதுவன்றோ நாம் விரும்பும் நோன்பு?
(இசை. 58 - 7)

# வெற்றியின் நாயகனே!

**பாஸ்கா விழா வாழ்த்துக்கள்**

"உங்களுக்கு சமாதானம் உண்டாவதாக!"

'காவலன்'

விலங்கினை உடைத்திடவா! வெற்றியின் நாயகனே!
கலங்கிய மக்கள் இங்கு கையெடுத்துக் கும்பிட்டோம்
தலங்கள் தோறும் உந்தன் பெருவிழா 'பாஸ்கா'வை
தடல் புடலாய்க் கொண்டாட முடியாத அகதிகளாய்
கலங்கிய கண்களுடன் வெற்றி விழாக் கோலத்தை
காண்கின்ற பக்தர்தமைக் கண்ணோக்கிப் பாருமையா!
துலங்கிய அமைதி மீண்டும் தூரவே ஓடுதையா!
தொடங்கிய பேச்சும் இன்று மூச்சின்றிக் கிடக்குதையா!
நொறுங்கிய ஆலயங்கள் நொந்த நம் இதயங்கள்
நிமிர்ந்திட மண்ணில் நின்று எழுந்து நீர் வாருமையா!
பயணங்கள் தொடர்ந்து செல்ல பாதையும் திறந்திட வா!
அவலங்கள் நீக்கி ஈழ மண்ணுக்கு அமைதியைத் தா!
சிலுவையால் எம்மை மீட்ட செம்மலே! — இனியும் இங்கு
நிலுவைகள் வேண்டாம்! உன்னால் நிச்சயம் முடியும் எல்லாம்.

✳ நவாலியூர் நாமனி

**தமிழர் புத்தாண்டு வாழ்த்துக்கள்**

"நாட்டில் அமைதி நிலவுவதாக!"

'காவலன்'

## எம்கருத்து

# பேசும் கல்லறைகள்

அன்று, ஒரு காலியான கல்லறை பேசியது; அமர காவியம் படைத்தது. ''எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர் என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும்'' (லூக். 4:18,19) அனுப்பப்பட்டவர் 'இறந்தோரிடமிருந்து உயிர்த்துவிட்டார்' (மத். 28:7). புத்துயிர் அளித்த கல்லறை அது.

இன்று, காவியமான பல கல்லறைகள் பேசுகின்றன; தாயகம் படைக்கின்றன. இழந்த உரிமைகளை திரும்பவும் பெற்று ஓர் இனம் தலை நிமிர்ந்து வாழ, தங்கள் வாழ்வையே தத்தம் செய்திருக்கும் தியாகச் செம்மல்களின் செய்தி இது. புத்தூட்டம் அளிக்கும் கல்லறைகள் இவை.

ஆனால், அன்றையைப்போல இன்றும், சில நடமாடும் வெள்ளையடித்த கல்லறைகளும் இல்லாமலில்லை. உண்மைக்குக் குரல் கொடுக்க, நீதிக்கு சாட்சி பகர, உரிமைக்குப் போராட இவை தயங்குகின்றன. புதுப்பித்துப் புத்துயிர் பெறவேண்டியவை இவையே.

'புதுப்பித்துப் பகிரும் திருச்சபையாக' மாறிடும் நோக்குடன் இம் மாதம் 19ஆம் திகதி தொடங்கவிருக்கும் தேசிய மேய்ப்புப் பணி மாநாடு இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமையுமென்பதில் ஐயமில்லை. 'இன்றைய உலகில் திருச்சபை' என்பதற்கேற்ப இம்மாநாட்டின் விளைவுகள் அமைய வேண்டுமென்பதுதான் எல்லோரினதும் எதிர்பார்ப்பு. இத் தேசிய மாநாடு இலங்கைத் தீவின் முக்கிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து, பரஸ்பர அன்பிற்கும் சமூக நீதிக்கும் வழிகாட்டியாக விளங்காவிடின் இம்மாநாடு பெரும் கேடாகவும் கேலிக் கூத்தாகவுமே இருக்கும்.

ஏழ்மை, அறியாமை, அச்சம், அடக்குமுறை, அடிமை வாழ்வு என்பவற்றால் இழி நிலைக்குத் தள்ளுண்டு அவற்றினின்று மீள ஏங்கித் தவிக்கின்றது நமது சமுதாயம். தற்போதைய மனித சூழ்நிலையை ஆக்க வழிகளில் எதிர்த்துப்போராடி, சமுதாயத்தில் ஈடுபாடு கொண்டு, தலைமையை ஏற்று நடத்தும் ஆர்வம் திருச்சபைக்குத் தேவை. அல்லாவிடில் சீர்குலைக்கும் சாராருடனும், இடர்படுத்தும் முறைகளுடனும் அதுவும் இணைந்ததாகக் கொள்வர் மக்கள். திருச்சபையின் பிரதிநிதிகளும் நிறுவனங்களும் செயற்படும் வழிவகைகளைக் கணிக்குங்கால், மனித முன்னேற்றம், முழு மனித விடுதலை ஏதோ தனிப்பட்டோர் அல்லது ஓர் இயக்கத்தினரின் அக்கறை போல் கருதப்படுகிறது.

நம் நாட்டில் எத்தனையோ பிரச்சனைகள் எத்தனையோ ஆயிரம் பேர்களைப் பாதிக்கும்போது, நாம் மூச்சு விடாமல் இருப்பது ''என் தம்பிக்கு நான் என்ன காவலாளியா?'' (ஆதி. 4:9) என்று கேட்ட காயினின் பொறுப்பற்ற அசட்டு மனப்பான்மையைப் பிரதிபலிக்கிறது அல்லவா? வடக்கிலும், கிழக்கிலும் நிகழும் அழிவுகள் தெற்கிலும், மேற்கிலும் தோன்றும் காலம் வரை காத்திருக்க வேண்டுமா? பாலைவனத்தில் ஒலிக்கும் கூக்குரலுக்கு செவிமடுக்க, பாலும் தேனும் பொழியும் செழிப்பில் வாழ்வோரின் அசமந்தம் தான் என்ன?

திருச்சபையின் உரிமைகள் பறிபோகும்போது சீறி எழுகிறோம்; ஆனால் பொதுவாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் மானிட உரிமைகள் காற்றில் பறக்கும்போது நாம் கண்மூடி உறங்குவது ஏன்? திருச்சபை ஒன்றுதான் நம் உலகமா? அதுதான் நம் உலகம் என்ற கணிப்பில் குறுகிய கண்ணோட்டம் கொண்டு, கிணற்றுத் தவளைகள் ஆகிவிடலாமா?

எந்தச் சூழ்நிலையில் எவ்வாறு கண்டனம் தெரிவிப்பது என்பதைப் பகுத்தறிய விவேகம் தேவை. ஆயினும், விவேகம் என்பது எப்போதும் எச்சரிக்கையுடன் பத்திரமாய் நடந்து கொள்வது மட்டுமன்று. விவேகம் அச்ச நிலைக்கு நம்மை ஒருபோதும் தள்ளிவிடக்கூடாது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும். கண்டனக் குரல் எழுப்புவதால் நம் சொந்த உரிமைகளும் சலுகைகளும், நம் நிறுவனங்களின் செல்வாக்கும் பாதிக்கப்படுமோ என்று அஞ்சி ஒதுங்குவதும், பாதுகாப்பான ஒரு வழி முறையைக் கையாளுவதும் கோழைத்தனமே!

அநீதி எனும் பெரும் தீ பற்றி எரியும் நம் நாட்டில், துணிவுடன் எதிர்த்துப் பேசி செயற்பட அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் கடமை உண்டு. இத் தேசிய மாநாட்டில் கூடும் பிரதிநிதிகள் இப்பாரிய பொறுப்பை உணர்ந்து செயல்படுவார்களாக.

# 2000 யூபிலி ஆண்டு உடனடி ஆயத்தம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

42. அனைத்தும் யூபிலியின் முதன்மையான குறிக்கோளையே, அதாவது விசுவாசத்தையும் கிறிஸ்தவர்களின் சாட்சியத்தையும் உறுதிப்படுத்துதலையே மையமாகக் கொண்டிருத்தல்வேண்டும். ஆகவே சகல விசுவாசிகளிடத்தும் பரிசுத்ததனத்தை அடைவதில் ஒரு உண்மையான ஏக்கத்தையும், மனந்திரும்புதலிலும், தன்னைப் புதுப்பிப்பதிலும் ஒரு ஆழ்ந்த அவாவையும் தூண்டுதல் அவசியமாகின்றது. தீவிரமான செபமும் தமது அயலவருடன், முக்கியமாக வறியவருடன் ஒருமைப்பாடும் கொண்ட சூழ்நிலையில் இது நிகழவேண்டும்.

ஆகவே, மறைக்கல்வி மீது ஆர்வத்தைப் புதுப்பிப்பதற்கு முதலாம் ஆண்டு ஒரு தக்க சந்தர்ப்பமாகும். இங்கு மறைக்கல்வி என்பது ஆதியில் கருதப்பட்ட பொருளில், அதாவது கிறிஸ்துவையும் அவரது மீட்பின் மறைபொருளையும் பற்றிய அப்போஸ்தலரின் போதனை என்ற பொருளில் குறிப்பிடப்படுகின்றது. இவ்விடயத்தில் கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி நூலை விரிவாகப் படிப்பது மிகுந்த நன்மை பயக்கும். ஏனெனில் மறைக்கல்வி நூலானது திருநூலின் போதனையையும், திருச்சபையின் உயிருள்ள பாரம்பரியத்தையும், திருச்சபையின் அதிகாரபூர்வமான ஆசிரியத்தையும், அத்துடன் திருச்சபைப் பிதாக்கள், திருமறைவல்லுநர்கள், புனிதர்கள் ஆகியோரின் ஆன்மீக முதுசொத்தையும் பிரமாணிக்கமாகவும், ஒழுங்காகவும் முன்வைக்கின்றது. கிறிஸ்தவ மறைபொருளை நன்கு அறிந்துகொள்வதற்கும் இறைமக்களின் விசுவாசத்துக்கு எழுச்சியூட்டுவதற்கும் இது துணைபுரியும். உள்ளபடி சொல்வதென்றால், கிறிஸ்து என்னும் ஆளைப்பற்றிய சில தவறான கருத்துகள் பற்றி விசுவாசிகளின் மனச்சாட்சிக்கு அறிவுறுத்தி, அவருக்கெதிராகவும் திருச்சபைக்கெதிராகவும் வரும் ஆட்சேபங்களைத் தெளிவுபடுத்துவதும் அவசியமாகும்.

43. இந்த ஆயத்தக் கட்டம் முழுவதும் பரிசுத்த கன்னி மரியம்மாள் மறைமுகமாகப் பிரசன்னமாயிருப்பாள். அவளைப் பற்றி, விசேடமாக அவளது தெய்வீக தாய்மையின் மறைபொருள் பற்றி இந்த முதலாம் ஆண்டில் தியானிக்கப்படும். அவளது வயிற்றிலேதான் வார்த்தையானவர் மனுவுருவானார். ஆகவே கிறிஸ்து வகிக்கும் மையமான இடத்தை வலியுறுத்துவதென்றால் அவரது பரிசுத்த தாயார் வகிக்கும் பங்கை ஏற்றுக்கொள்வது தவிர்க்கமுடியாதது. அவளுக்கு அளிக்கப்படும் வணக்கம் சரியாக விளங்கிக்கொள்ளப்பட்டால், ஒரே இடைநிலையாளரான கிறிஸ்துவின் மகத்துவத்தையும் பயன்நிறைவையும் அது எந்த விதத்திலும் குறைவுபடுத்தாது. உண்மையில் மரியாள் இடையறாது தனது திருமகனைச் சுட்டிக்காட்டிய வண்ணம் இருக்கிறாள். நடைமுறைப்படுத்தப்பட்ட விசுவாசத்துக்கு முன்மாதிரியாக சகல விசுவாசிகளுக்கும் அவள் எடுத்துக் காட்டப்படுகிறாள். பக்தியோடு அவளைப்பற்றித் தியானிப்பதிலும், மனுவுருவெடுத்த வார்த்தையானவரின் ஒளியில் அவளைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதிலும், திருச்சபையானது பயபக்தியுடன் மனித அவதாரமென்னும் அதிஉன்னத மறைபொருளினுள் இன்னும் ஆழமாகப் புகுந்து, இன்னும் அதிகமதிகமாய் தனது மணமகளைப் போலாகின்றது.

(வளரும்)

# அரசியல் பிர...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, இப்பேச்சு வார்த்தைகள் தளர்ந்து போகாவண்ணம் நடவடிக்கைகள் எடுப்பதுடன், அவற்றை ஊக்குவிக்க உற்சாகம் காட்டி துரிதமாய் செயல்பட வேண்டுமென இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக குமாரத்துங்க அவர்களை ஒரு கடிதம் மூலம் கேட்டுக்கொண்டார் யாழ் ஆயர்.

போக்குவரத்து அமைச்சர் சிறீமணி அத்துலத்முதலியையும் ஆயர் அவர்கள் சந்தித்தது குறிப்பிடத்தக்கது.

## *மரபுகளும் மாற்றங்களும்*

— என். சண்முகலிங்கன்

### 28. இன்று புதிதாய்ப்பிறந்தோம்

1. '' சென்றதினி மீளாது மூடரே! நீர்
எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றொழிக்கும் கவலையெனும்
குழியில் வீழ்ந்து
குமையாதீர்! சென்றதனைக் குறித்தல்
வேண்டாம்
இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று
எண்ணமதைத் திண்ணமுற இசைத்து ''
வாழ அழைப்பான் பாரதி.

பாரதி மட்டுமன்றி இன்றைய உளவியல், உளவளத் துணையாளரும் இந்த உள மறுமலர்ச்சியையே வேண்டி நிற்கின்றனர்.

2. ஆனாலும் இந்த புதுமலர்ச்சி—புதிய சிந்தனையை மறுத்து துயரக்குழியுள் மூழ்கிவிடும் மனித அவலங்களும் தொடரக் காணலாம்.

இந்த துயரங்களிலிருந்து விடுதலை தருவதற்குப் பதிலாக மேலும் துயரகடலுள் மனிதரை வீழ்த்திவிடும் போதைப் பொருட்களுக்கும், விதிசார் விளக்கங்களுக்கும் குறைவில்லை.

உடலே உற்சாகமூட்டி புதிய உணர்வை ஊட்டுதற்குப் பதிலாக மற்றவன் துயரில் மகிழ்ச்சி காண்பதும், காலப்போக்கில், தனது துயரையே தான் விளங்கமுடியாமல் போவது, தான் துயரப்படவே பிறந்தவன் எனும் போலிச் சமநிலை காண்பது என இந்த துயரக் கதைகள் தொடரும்.

3. 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்ற புது உணர்வு பெற அழைத்த அந்த கவிஞன் அழைப்பு, கடந்த காலத்தையே மறந்த வெறும் இருப்பு மகிழ்ச்சியை மட்டும் கருதுவதல்ல.

வீண் கவலைகளை, திரும்பிவராதபடி அழித்துவிடும் புத்துணர்வை பெறுவதன் வழி, இன்றைய வாழ்க்கையையும் இனிவரும் வாழ்வையும் அர்த்தமுள்ளதாக்குவோம்.


# 29வது
# உலகத் தொடர்பு நாளையொட்டி
## திருகோணமலை — மட்டக்களப்பு
மறை மாவட்ட
சமூகத் தொடர்பு நிலையம் நடாத்தும்
அனைத்திலங்கை ரீதியிலான கட்டுரைப் போட்டி

பரிசு : ரூபா 1000/=, ரூபா 750/=, ரூபா 500/=

தலைப்பு : சமூக விழுமியங்களிலும், கலாசாரத்திலும் திரைப்படங்களின் தாக்கம்

- முழுத்தாளில் நான்கு பக்கங்கள் முதல் ஐந்து பக்கங்களுக்குள் தெளிவான கையெழுத்தில் அமைய வேண்டும்.
- தாளில் ஒரு பக்கம் மட்டுமே எழுதப்படுவதோடு பெயர், முகவரி தனியாக எழுதி இணைக்கப்பட வேண்டும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
- கட்டுரை அனுப்பவேண்டிய இறுதி நாள்: 30-04-1995.
- முகவரி : இயக்குனர், சமூகத் தொடர்பு நிலையம்
அ. பெ. எண் 44, மட்டக்களப்பு



# சிலுவைப் பலி

★ M. N. நவரட்ணராஜா
வளன்புரம்

மானிட வரலாற்றில் பலியானது ஒரு முக்கிய தவிர்க்க முடியாத வாழ்வில் இரண்டற கலந்துள்ள அம்சமாக விளங்கி வருகின்றது. பலியானது, தியாகம், அர்ப்பணிப்பு, பணிவாழ்வு என்பனவற்றிற்கு உள்ளார்ந்த அர்த்தம் கொடுப்பதாக உள்ளது. பலியின்றேல் வாழ்வில்லை, வளமில்லை, ஒரு குடும்பத் தலைவனின் பலி வாழ்வில்தான் ஒரு குடும்பம் சீராக, சிறப்பாக வாழமுடியும். வித்தானது பலியானால் மட்டுமே அது பயிராக முடியும். பலியினால்தான் புது யுகங்கள், புதிய வரலாறுகள் புதிய தேசங்கள் உருவாக்கம் பெறுகின்றன. இத்தகைய பலியைத்தான் இறைவனும், தான் உலகத்தை எவ்வளவு அன்பு செய்கிறார் என அளவிடு செய்யும் கருவியாக பயன்படுத்துகிறார். ''இறைவன் உலகை எவ்வளவு அன்பு செய்கிறார் என்றால் மரணம் மட்டும் அதுவும் சிலுவை மரணம் மட்டும் தன்னைத் தாழ்த்துகிறார்,'' என்கிறார் புனித சின்னப்பர். பாவத்தில் வீழ்ந்த மனித வர்க்கத்தை அதிலே உழன்று தானே மீட்சியடையும் படி இறைவன் கைவிட்டுவிடவில்லை. மாறாக பேரிரக்கம் கொண்ட அவர் கிறிஸ்து நிறைவேற்றிய விடுதலைச் செயலின் வழியாக அவர்களை தமக்கு ஏற்புடையவர்களாக்கப்பட இறைவன் அவரை பரிகாசப் பலியாக்கினார் என்று உரைக்கின்றார்.

''கட்டுண்ட கள்வன் தானோ கட்டினை விட்டுக் கொள்வான் விட்ட வேதனை தீர்த்து விடுவிப்பான் ஒருவன் வேண்டுமன்றோ'' என சிசாசாரம் என்னும் பழம் பெரும் நூல் கூறுவது போன்று எம்மைப் பாவக்கட்டில் இருந்து மீட்பவராக இறைவன் குருவாக, கிறிஸ்துவாக அவமானத்தின் சின்னமான சிலுவைப் பலியை தெரிந்து கொண்டார். எமது முன்னோர்களின் வேதங்களில் கூட பலியானது முக்கிய இடத்தை வகித்திருந்தது. ''யக்ரும் ப்ரதமானி தர்மானி'' என்கிறது வேதம். அதாவது பலியிடுதல் எமது முக்கிய கடமைகளில் ஒன்று என்பதாகும். சாமவேதம் இன்றும் தெளிவாக இறைவன் ஒருவராய், அழகராய், பாவத்தை அழிப்பவராய் பலியாய், நீதியின் செங்கோலைப் பிடித்தவராய் என்று இறைவனின் குணாதிசயங்களை எடுத்தியம்புகின்றது. தெய்வம் முதலில் ஜோதியாகவும், பின்னர் பிரணவமாகவும் இறுதியில் யக்ஞம் (பலி) மாகவும் தன்னை வெளிப்படுத்துவார் என்கிறது. ரிக் வேதம் இன்றும் ஒருபடி மேலே சென்று ''விஷ்வசர்மா என்ற குற்றமற்ற புருவுன் இரத்தம் சிந்தி நம்மை பாவத்தில் இருந்து மீட்டுக் கொள்வார்'' என்று உரைக்கிறது. சதப்பத பிராம்மணமோ ''தேவன் தாமே உண்மையான பலி'' என விளம்புகிறது. ஆதியில் ஒளியாகவும், இறுதியில் சிலுவையிலே பலியாகவும் தம்மை, கருணையை, இணையற்ற அன்பை இறைவன் உலகுக்கு வெளிப்படுத்துகிறார்.

எனவேதான் ''யூதர்கள் அடையாளத்தையும், கிரேக்கர்கள் ஞானத்தையும் தேடுகிறார்கள்'' நாமோ சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் போதிக்கின்றோம் என கிறிஸ்துவின் இரத்தம் சிந்திய சிலுவைப் பலியை மீட்பின் செய்தியை துணிவுடனும், தெளிவுடனும் எடுத்துரைக்கின்றார் புனித சின்னப்பர்.

தன்னைத் தந்து தடுத்தாட் கொண்ட நின் கருணைக்கு என்னைத் தந்து என்ன பயன் என்று உருகுகிறார் தாயுமானவர். நாமும் சிலுவையில் தான் வாழ்வுண்டு, வழியுண்டு, மீட்புண்டு என்று எம் சிந்தையிலிருத்தி, கசிந்துருகி முத்தி தரும் சிலுவையடியில் சிரம் பணிவோம்.

# சிலுவையிலே மரித்த செம்மலர்

அருள் மா - ா மடியினிலே தவழ்ந்திட்ட மாமலர் – அது
நாசரேத்தூர் தன்னிலே புகழ்ந்திட்ட பூ மலர்
அருள் மாதா மடியினிலே த்வழ்ந்திட்ட மாமலர் – அது
''நிறை நல்'' கருணையுடன் விரிந்திட்ட பூங்குழல்
பாவமதை என்றும் அறிந்திடா அம்மலர் – கொடும்
பகைவர் வதையினில் பாடுபட்ட செம்மலர்
செங்குருதி தோய்ந்து – தூயநல்
வெண்குருதியாய் வெளிவந்த மரி–யேசு மலர்
அம்மலர் வெண்மலர் மக்கள் மனதினில் மங்கா ஒளிச்சுடர்
சிலுவை தன்னிலே தீபமாய் நின்று – நற்சுடர்
தருகின்ற இயேசு மலர் – இன்று
நல்வழிதன்னை தன் வழியாய்க் கொண்ட செம்மலராயிற்றே
செங்குருதி தோய்ந்த பருதி மலர் – இன்று
கருகி வெந்த ''பூ'' மலராயிற்றே
மணிவண்ணச் செம்மலர் தன் மலரால் நிறைக்க
பூவுலகம் வந்ததே புனித ''மா'' மலரது
குருதியில் தோய்ந்த நல் செம்மணிமலரே
மலராயோ வாடிய மாந்தர் எம்மனதில்

ச. வில்பேட்,
அ. ம. தி. குருமடம்,
கொழும்புத்துறை.



# உயிர்த்த யேசு தரும் உன்னத செய்தி

கோதுமை மணி நிலத்தில் வீழ்ந்து மடிவதன் மூலம் மிகுந்த பலன் அளிக்கின்றது. அதேபோன்று இயேசுவும், அனைவரினும் பாவம் போக்க பாவச் சிலுவையேற்று, கோரக் கொடுமைப்பட்டு கொலையுண்டதினால், அவர் எமக்கு ஓர் புது வாழ்வைப் பெற்றுத் தந்தார். பாடுகள் பல அனுபவித்த இயேசு பல பாடங்களை எமக்குப் படிப்பிக்கின்றார். உண்மை என்றும் உறங்குவதில்லை எனவும், அநீதி என்றும் அரசாள்வதில்லை எனவும், சத்தியம் என்றும் சாவதில்லை என்றும் சான்று பகர்கின்றார். உன்னத உள்ளம் கொண்ட இயேசுவை தாசிக்க அதிகாரத்தை துர்ப்பிரயோகம் செய்தது இவ்வுலகம். ஆனால் இயேசுவின் தாழ்மையும் தளரா மனவுறுதியும் அவர்கள் நினைத்தவற்றையெல்லாம் நீர்மேற் குமிழி போல் மாற்றி விட்டது. குலைத்துக் கொண்டிருந்த உலகம் ஒரு கணம் மலைத்துப்போய் நின்றது. உண்மையில் இயேசு இறைவன் என்பதை உணர்ந்து கொண்டது. அனுபவங்கள் தான் வாழ்க்கையில் பலபாடங்களைச் சொல்லித்தருகின்றன. மறுமுனையில் தோமையார் போன்று கண்டாலன்றி கடைசி வரைக்கும் நம்பமாட்டேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கும் கூட்டம் இன்றும் எம் மத்தியில் உண்டு. நாம் எந்த வர்க்கத்தை சார்ந்தவர்கள்? அனுபவத்திலா, அல்லது அடையாளங்களிலா ஆண்டவனைக் காண்கின்றோம். எம் சிந்தைகளைச் சிதற விடுவோம். சாவை வென்ற சத்தியனாய், உயிர்ப்பை உலகிற்கு வெளிப்படுத்திய உத்தமனாய் தோன்றிய இயேசுவை எம்முடைய அன்றாட வாழ்வில் அனுபவிக்க எமக்கு அழைப்பு விடப்படுகின்றது. எம் தீய வாழ்வில் இருந்து திருந்தி வாழும் போதும், அகதியாய் அல்லல் படுவோர்க்கு அடைக்கலம் கொடுக்கின்ற போதும், அழுகுரலில் வாழுகின்றவர்களின் அழுகையை அகற்றுகின்ற போதும், உணவின்றி அவதிப் படுவோர்க்கு உதவிசெய்கின்ற போதும் உயிர்த்த இயேசு எம்மில் உதயமாகின்றார். ஆகவே பழையவாழ்வைக் களைவோம். புதிய வாழ்வினுள் புகுவோம், புத்தம் புது மலராய் இந்நானிலத்தில் மணம் வீசுவோம்.

அருட்சகோதரன்
யே. நிக்ஷன் டோறக்ஸ்
புனித சவேரியார் குருமடம்
கொழும்புத்துறை.

# இறையரசில் நிரந்தரமாக உயிர்ப்போம்

ஆக்கம்:- P. N. B. கமலகாசன், பாண்டியன்தாழ்வு.

உயிர்ப்பு என்பது ஏதோ ஒரு நிறைவேறிய நிறைவு மட்டுமல்ல அது ஒரு இயக்கம். கிறிஸ்துவின் மரணம் இன்றி உயிர்ப்பு என்று ஒன்று இருந்திருக்க இயலாது. எனவே கிறிஸ்து பிறந்தார் -இறந்தார் -உயிர்த்தார். கிறிஸ்தவ மதத்தின் நம்பிக்கையும் விசுவாசமும் ஆணிவேரும் அடி மண்ணும் இந்நிகழ்ச்சிகளே. கிறிஸ்து பிறந்திருக்காவிட்டால் படைப்பவனுக்கும் படைப்பிற்கும் இடையே பாலம் அமைந்திருக்காது. இறந்திருக்காவிட்டால் படைக்கப்பட்ட மனிதனின் பாவச் சுமைகள் சுமை தாங்கியில் இறங்கியிருக்க முடியாது. கிறிஸ்து உயிர்த்திருக்காவிட்டால் மீட்பு முழுமை பெற்றிருக்காது. ஆகவே இந்த மூன்று நிகழ்ச்சிகளுமே கிறிஸ்தவ நம்பிக்கையின் – மீட்பின் – விசுவாசத்தின் – முக்கோணங்கள்.

எனவே ஏழைகள் வளம் பெறவேண்டும், ஒடுக்கப்பட்டவர் உரிமை வாழ்வு பெற வேண்டும், பாவிகள் மன்னிப்பு பெறவேண்டும், சிறைப்பட்டவர் விடுதலை பெறவேண்டும். ஆண்டவர் அருள் தரும் ஆண்டின் அறிவிப்பு, இந்த இயக்கத்தின் இறுதி வெற்றி நிகழ்ச்சி தான் உயிர்ப்பு.

கிறிஸ்துவின் சாயல் மனிதன். இது மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மை. அம்மனிதன் மீது சட்டம், ஒழுங்கு, பாரம்பரியங்கள் இவைகளின் பெயரால் இன்று சுமத்தப்படும் பாரமான சிலுவை எத்தனை? அறியாமை இருளின் பிடியில் அவர்களை வாழவைத்து ஆதாயம் தேடும் அதிகார மோகம் பிடித்தவர்கள் எத்தனைபேர்? பக்தி என்ற பெயரில் மூடநம்பிக்கைகளை வளர்த்து அவனை வாழ்க்கையில் முன்னேற விடாமல் தடுக்கும் மதவழிபாடுகள்.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## சத்திய வேள்வியே நித்திய உயிர்ப்பு

மண்ணில் வீழ்ந்தழியும் விதையாலே
மலர்வதே புத்துயிர்ப்பு
விண்ணில் கூடிவரும் முகிலாலே
மண்ணில் குளிர்ந்த மழை
கண்ணில் சேர்ந்திருக்கும் இமையாலே
கருவிழிக்குப் பாதுகாப்பு
உன்னில் இருக்கும் 'நான்' அழிந்தால்
உள்ளத்தில் புத்துயிர்ப்பு

இத்தரை மீதினில் தாயவள் செய்வதே
ஈடில்லாப் பெரு வேள்வி
நித்திரை மறந்து பட்டினி கிடந்து
புத்திரரைக் காக்கின்றாள்
தத்துவ வேள்விகள் செய்வதாலே
தர்மம் நிலைத் திடுமா?
சத்திய வேள்விகளாலே புவியில்
நித்திய உயிர்ப்பு உண்டாம்.

உலகத்தை மீட்க இயேசு
உதிரத்தால் வேள்வி செய்தார்
கலகமே மூண்ட வேளை தம்
கருணையைக் காட்டி நின்றார்
பெலமின்றி வீழ்ந்த வேளை இறை
பலத்தையே பாரித் தந்தார்
வலப்பக்கக் கள்வனுக்கு இயேசு
வான் வீட்டை உயிர்ப்பாய் தந்தார்

அ. பீற்றர் ராஜன்
யாழ்' மறைக்கல்வி நிலையம்

# பூங்காவனம்

மக்கள் பலரும் பூங்காவனத்துக்குச் செல்வது தங்கள் மன மகிழ்ச்சிக்காக, பொழுது போக்குக்காக. ஆனால் கிறிஸ்து என்ற தெய்வமனிதன் நடுநிசிக்கு அண்மித்த வேளை அன்று பூங்காவனஞ்சென்றார், மன மகிழ்ச்சிக்காகவல்ல. ''என் ஆன்மா சாவுக்கு ஏதுவான வருத்தமுற்றிருக்கிறது'' (மத். 26;38) என்று கூறித் துயரப் படவும், ஆயாசப்படவும் செல்கிறார், பரமதந்தையின் ஏக குமாரன், இஸ்ராயேலரால் காலா காலமாக எதிர்பார்க்கப் பட்ட ''மெசியா'' என்ற மனுக்குலமீட்பர்.

தந்தையின் திருவுளத்துக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்துத் தம்மைத் தாழ்த்தியவர்.

செல்வி. T. M. R. யோசெவ்
நவாலி தெற்கு, மானிப்பாய்.

''சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிவானவர்'' (பிலி. 2;8).

கிறிஸ்து யேசு பூங்காவனஞ் சென்று கவலை அடைந்தது ஏன்?

எந்த மனிதனும் துன்பத்தை, வேதனையைத், தனிமையை, விரும்புவதில்லை எதிர்பார்ப்பதும் இல்லை. ஆனால் அவரோ தனக்கு வரவிருந்த துன்பம், வேதனை, தனிமையை நன்கு அறிந்து அதை ஏற்றுக் கொண்டார். ஆயினும் முப்பத்து மூன்று வருடங்கள் இதையே (தனது பாடுகளை) எதிர்பார்த்திருந்தாலும் அதை அணுகும்பொழுது அவரது மனித சுபாவம் கதறியது.

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)



# கிறிஸ்துவின் உயிர்ப்பின் ஆழ்ந்த செய்தி

சகோதரன் ஏ. எஸ். றொஷான்
புனித சவேரியார் குருமடம்
கொழும்புத்துறை.

காட்டிலுள்ள மரங்களைப் பார்த்து அவற்றைத் தனித் தனியே ஆராய்ந்து வியக்கும் ஒருவன், அவை சேர்ந்து உருவாக்கும் முழுக் காட்டின் அழகைக் கண்டு களிக்கத் தவறி விடலாம். அது போன்றே, இயேசுவின் உயிர்ப்பை அதிக ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு பார்க்கின்ற ஒருவன். அந்த உயிர்ப்பு அவனது வாழ்வுக்குத்தரும் ஆழமான செய்தியை கவனியாது தவற விட்டு விடலாம். தனித்தனி மரங்களின் அழகு, முழுக்காட்டின் அழகை ஆழமாய் அனுபவிக்க உதவ வேண்டும். அதே வழியில் ''உயிர்ப்பு'' பற்றி பல்வேறு கருத்துக்கள் அவ்வுயிர்ப்பை, நாம் ஆழமாய் அணுக உதவ வேண்டும். எனவே இயேசுவின் உயிர்ப்புப் பற்றிய பல்வேறு சிந்தனைகளில், சிலவற்றை நான் பார்க்க விழைகின்றேன்.

இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தது போல் நாமும் ஒரு நாள் உயிர்த்தெழுவோம் என்பது ஒரு கருத்து. இது அவரது வெற்றி, மாட்சி, மகிழ்வில் நாம் என்றென்றும் பங்கெடுப்போம் என்பதை உறுதிப்படுத்துகின்றது. ஆனால் இயேசுவின் உயிர்ப்பு பரம தந்தைக்கு அவர் காட்டிய குழந்தைக்குரிய நம்பிக்கை, கீழ்ப்படிதலுக்கு பரம தந்தை காட்டிய அன்பின் வெளிப்பாடே. இதே வழியில் இயேசுவைப் பின்பற்றி அவரோடு சேர விரும்பும் எல்லோரையும் தந்தை உயிர்த்தெழச் செய்கிறார். உயிரைக் கையளிக்கவும், அதைப் பெற்றுக்கொள்ளவும், இயேசு அதிகாரமுள்ளவர் [அரு: 10: 18]. அவரையே தந்தை தமது மாட்சிமையில் உயிர்தெழச் செய்தார் [உரோ. 6: 4] இது தந்தை, மகன், தூய ஆவியின் நித்திய திட்டம். இந் திட்டத்தில் நாம் இணைவதே இறைவனின் சித்தம்.

இயேசுக் கிறிஸ்து முழுமையான ''இறுதி வார்த்தை'', இது இன்னோர் கருத்து. அவருடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு, மகிமை, ஆவியைப் பொழிதல் என்பன இரக்கமுள்ள இறைவனின் இறுதி நிகழ்வுகள். இன்று நிகழ்வனவெல்லாம், அவ்வளவில்லாத இரக்கத்தின் இறுதி நிகழ்வுகளில் நம்பிக்கை கொள்வோரை கிறிஸ்து தமது உயிர்ப்பு வாழ்வில் இணைத்துக் கொள்வதே. இதற்காக இயேசு எப்படி பாவம் தவிர்த்து மரணம், துன்பம், தீமைகளுக்கு முகம் கொடுத்து வென்றாரோ, அவ்வாறே அவரைச் சார்ந்தோரும் இருக்க முடியும்.

இறைவனுக்கும், மனிதனுக்குமிடையிலான உறவு கிறிஸ்துவின் உயிர்ப்பால் முத்திரையிடப் பட்டுள்ளது என்பது பிறிதோர் கருத்து, இது ஒரு போதும் உடையாதது. ஏனெனில் தமது பாடுகள், மாணத்தினால் சாவின் ஆற்றைக் கடந்த கிறிஸ்து புதிய வாழ்வுக்கு உயிர்த்தெறினார், அவ் வாழ்வை விரும்பி வரும் அனைவரோடும் அதைப் பகிர்ந்து கொள்கிறார். பாவத்தின் பரம்பரைச் சொத்தான மரணம் அழிக்கப்பட்டு விட்டது. மரணத்திற்குப் பதில் இறைவனின் புது வாழ்வு இயேசுவை நோக்கித் திரும்பும் அனைவர் உள்ளத்திலும் கொலுவேறுகிறது. கிறிஸ்தவ வாழ்வு என்பது இயேசுவின் மரணம் உயிர்ப்பின் வல்லமையால் மாற்றம் பெற்ற மனிதத்தின் புது வடிவமாகும். ஆரம்பத்தில் பிடிவாதமாக இயேசுவை நம்ப மறுத்த பலர் அவரை அனுபவித்த உடன் இத்தகைய மாற்றம் நிகழ்வதை எமது அன்றாட வாழ்வில் நாம் கண்டுள்ளோம்.

பழைய ஆதாமின் அகந்தையால், இறைவனின் - அன்பைப் பிடிவாதமாய்ப் புறக்கணித்ததனால் மனிதன் அடைந்தது மரணம், தீமை, அழிவு. மனித வாழ்வு பாவத்தில் சிறைப்பட்டது. இறைவனின் கொடைகளைப் பாவச் சக்தியில் தொலைத்தோம். இச் சூழலிலிருந்து விடுவிக்க மீண்டும் ஓர் ஆதாம் பிறக்க வேண்டியிருந்தார். பாவச் சிறையை உடைத்து மனிதத்தை இறை ஒளிக்கு அழைத்துவர, பாவத்தில் சிறைப்படாத ஒருவர் தேவைப் பட்டார். அவரே கிறிஸ்து. எம்மை சிறை மீட்க அவர் கொடுத்த விலை அவரது உயிர். உலகின் எல்லாப் பலிகளின் நோக்கத்தையும் அவருடைய பலி நிறைவேற்றி விட்டது. அந்த ஒப்பில்லா அன்புப் பலியால் நாம் உறுதியாக இறைவனின் அன்பில் இணைக்கப்பட்டுள்ளோம். அவ்வன்பின் அருளைத் திருச்சபையின் அருள்சாதனங்கள் இன்றும் எமக்குப் பொழிகின்றன, அவை எமது தலைவனாம் கிறிஸ்துவின் உயிர்ப்பில் இணைய, அதனை வாழத் துணை செய்கின்றன. இயேசு இறைமகன் என்ற நிலையில் வாழ்ந்து, மரித்து மகிமையான உயிர்ப்பை அடைந்தது போல் நாமும் அடைய இறைவன் திருச்சபைக்களித்த அருளடையாளங்கள் எமக்கு விசேட துணையாகின்றன.

உயிர்ப்பைப் பற்றிய இத்தகைய இறையியல் கருத்துகள் இடிந்து, சிதைந்து. இரத்தம் தோய்ந்து, வீடிழந்து, தாயிழந்து, குடிக்கும் தண்ணீருக்கு உரிமையற்றிருக்கும் எமக்குத்தரும் செய்தி என்ன? காய்ந்த கோப்பையைக் கண்ணீர் விட்டுச் சுரண்டும் அனாதைக் குழந்தைக்கு உயிர்த்த கிறிஸ்து யார்?

அவரே நம்பிக்கை, உயிரைப் பிடித்து வைத்திருக்கும் நம்பிக்கை. நாம் தேடும் அமைதி வரும், என்று அடித்துச் சொல்லும் நம்பிக்கை. அதேவேளை அந்த அமைதிக்கான ஒரு ஆணித்தரமான சவால். ''தந்தையே ஏன் என்னைக் கைவிட்டீர்?'' எனும் வேதனையின் உச்சியை அடைந்தே, இயேசு ''உயிர்ப்பு'' என்னும் மகிமை பெறவேண்டி இருந்தது. தம்மவரால் கைவிடப்பட்டு, மனித மாண்பு கெட்டு நிர்வாணமாய், இரத்தம் சிந்தி, சித்திரவதை செய்யப்பட்டு, கொலையுண்டு பெற்றதே கிறிஸ்துவின் உயிர்ப்பு. அது முழு மனித இனத்துக்கும் முழுமையான விடுதலையைக் கொணர்ந்தது.

நாமும் நிரந்தரமான, முழுமையான நிம்மதியை, அமைதியை மகிழ்ச்சியைஎமதுவாழ்வில் அனுபவிக்க வேண்டுமென்றால் எமது மண்ணுக்கு கொணர வேண்டுமென்றால், அவ்வாறு துன்பத்திற்கு முகம் கொடுத்து வேதனையின் சவாலை ஏற்றுக் கொண்டு அன்பில்லாத எமது வாழ்வுக்குக் கொலையுண்டேயாகவேண்டும். அதுவே கிறிஸ்தவம் எமக்குத் தரும் வழி. அப்போதே சிதைந்து போயிருக்கும், கொலை செய்யப்பட்டிருக்கும், எமது சமூகத்தை நாம் உயிர்க்கப் பண்ணலாம். அதற்காக ஒவ்வொருவரும் இணைவோம். ஒன்றாய் கிறிஸ்துவின் சவாலை ஏற்றுக் கொண்டு, ஒருவருக்கொருவர் தோள் கொடுத்து, கிறிஸ்துவின் உயிர்ப்பை இம் மண்ணிற்குக் கொணர்வோம்.

## வாழ்வைப் பகிர்ந்தளிப்போம்

அன்புக்கு வழியாய் அரணமைத்து
அனைத்து மக்களை அரவணைத்து
சகோதர சமத்துவ வழியமைத்து
தரணிக்கு இறைமக னாகவந்தார்

துன்பத்தில் அமிழ்ந்து பரிதவித்து
துடிக்கின்ற மக்களை மீட்பதற்கு
துன்பத்தின் சுமையைத் தானெடுத்து
இன்பத்தை எமக்கு அளித்தவரே

தீராத பிணக்குகள் தீர்ந்திடவே
சிந்தையில் சமாதானம் ஓங்கிடவே
ஆயுத கவலைகள் அகல்வதற்கு
அனைவரும் கூடி மகிழ்ந்திடுவோம்

அடிமை விலங்கை உடைத்தெறிய
அடக்கப் பட்டோர் மீட்சிபெற
ஆன்மீக விடுதலை பெறுவதற்கு
ஆனந்தம் ஆனந்தம் பொங்கிடவே

நான் எனும் அகந்தை அழிந்திடவே
நமக்கென ஒருவர் ஒருவர்மட்டில்
வான்மழை போன்று பயன்கொடுத்து
வனப்புற ''வாழ்வைப் பகிர்ந்தளிப்போம்''

● வேல்மாறன்

## மனுக்குல இரட்சணியத்தின் மீட்பின் திருவிழா ஈஸ்டர் பண்டிகை

★ செல்வி. A. M. மஞ்சுளிக்கா
'பிறேமஸ்ரன்', நெல்லியடி, கரவெட்டி.

இன்று உலகமெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் மீட்பின் திருநாளாகிய ஈஸ்டர் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். ''ஆண்டவர் அருளிய நாளிதுவே, இன்று நாம் களிகூர்ந்து அகமகிழ்வோமாக'' (சங். 117 : 24). ஏனெனில் கிறிஸ்துவின் தெய்வீகத்தின் மகிமையை விளங்கச் செய்து, மனுக்குலத்திற்கு இரட்சணியத்தைத் தந்த இந்நாளைப் போல் வேறொன்றும் உலகிலில்லை எனலாம்.

இந்த மீட்பின் வெற்றி மனுக்குலத்தின் வெற்றி ஆகும். ஆதித்தாய் தந்தையரின் பாவக்கறையினால், சாபத்திற்குள்ளான மனுக்குலம் கிறிஸ்துவினால் விடுதலை பெற்று திரும்பவும் கடவுளிடம் இணைகின்றது. ''ஆதாமில் எல்லோரும் மரிக்கின்றதுபோல கிறிஸ்துவில் எல்லோரும் உயிர்ப்பிக்கப்படுகின்றார்கள்'' (1கொரி. 15 : 22). ஏனெனில் அவருடைய உத்தான பரம இரகசியத்தின் பலன் நமது பரிசுத்த சீவியத்திற்கு மேலான உதவியாகவும், கடைசி வெற்றியின் பிணைப்பாகவும் இருக்கின்றது.

கிறிஸ்துவின் மரணத்தினாலும், உத்தானத்தினாலும் நமக்கு அடைந்து கொடுத்த இந்த இரட்சணிய சீவியத்தில் அதிகமதிகமாகப் பங்கு கொள்ளவேண்டும் என்பதே பாஸ்கா கால சந்தோஷமும் கிறிஸ்தவனின் கடமையுமாகும். ''பாஸ்கா'' என்பது எபிரேயமொழி. ''வழி கடந்து போதல்'' எனப் பொருள்படும். எகிப்து தேசத்தின் அடிமைத்தனத்தில் நின்று மோயீசனால் மீட்கப்பட்ட எபிரேய மக்கள் தமது சொந்த நாட்டிற்குப் புறப்படும்போது செம்மறியைப் புசித்துச் சந்தோஷமாக கொண்டாடி ''பாஸ்கா'' என அழைத்தனர்.

இதனை வருடா வருடம் அனுசரித்தனர். சாவு, பாவம், பசாசு இவற்றின் அடிமைத்தனத்திலிருந்து மனிதனை மீட்டு வரப்பிரசாதத்தின் புது சீவியத்திற்கும், மோட்ச உரிமையை மறுபடியும் பெற்றுத் தந்த யேசுக்கிறிஸ்துவின் உயிர்த்தநாள் புதிய ஏற்பாட்டின் மெய்யான பாஸ்காவாக இருக்கின்றது.

இன்றைய ஆராதனையில் வானவர்களின் கீதத்தில் ''உலகின் பாவங்களைப் போக்கும் செம்மறியே'' என்ற வாக்கியம் இன்று ஆழ்ந்த கருத்தோடு இனிமையாக ஒலிக்கின்றது. அக்களிப்பின் வெற்றியை எபிரேய பதம் 'அல்லேலுயா, அல்லேலுயா'' ஒலிக்கின்றது.

இவ்வுலக வாழ்வி சோதனைகளும், துன்பங்களும், கஷ்டங்களும் நம்மை நெருங்கிக் கொண்டே இருக்கின்றன. ஆயினும் வரப்பிரசாதம் எமக்கு என்றும் உண்டு. இவ்வுதவியினால் நாம் பாவத்தின் மேல் கொள்ளும் வெற்றியே, நம்மை இறுதி வெற்றிக்கு கொண்டு செல்லும். அப்படியே சிலுவை மரணத்தின் உத்தானமும், நம்மை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

## பூங்காவனம்....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

''அப்பா தந்தையே அனைத்தும் உம்மாற் கூடும், இத் துன்பக்கலத்தை என்னிடமிருந்து அகற்றியருளும். ஆயினும் நான் விரும்புவதன்று, உமது விருப்பமே நிறைவேறட்டும்'' (மாற். 14:36), என்று கூறினார். இவரது துன்ப வேதனைக்கு மூன்று ஏதுக்கள்;

முதலாவது:- அவர் படப்போகும் பாடுகளின் வேதனையும், அவமானமும், யூதர்களின் பரிகாசமும், இறைமகனாகிய இவர் முன்பாக அறிந்து அடைந்த வேதனையும்.

இரண்டாவது:- அவர் அடைந்த ''தன்மை'' 'தமக்குத் துணை செய்பவன் எவனுமில்லை'' (இசை. 63 : 5) என்றபடி அவர் தாம் அனுபவிக்கப் போகும் தன்மையை நினைத்து வேதனைப்பட்டார்.

மூன்றாவது:- கிறிஸ்து தாம் அனுபவித்த பாடுகளையும் தனிமையையும் அறிந்து வேதனைப் பட்டதிலும் மேலான ஒரு வேதனை அவரைச் சூழ்ந்தது. கிறிஸ்து யேசு இவ்வுலகிற்கு வந்தது மனுக்குலத்தை மீட்க. ஆனால், இவரது பாடுகளின் பெறு பேறுகளை அடையாது நரகில் விழப் போகும் மனிதரைக் கண்டதினால் அளவுகடந்த கவலை அடைந்தார். அதனால் எந்த மனிதனுக்கும் எந்தக் காலத்திலும் கண்டிராத ''வியர்வை'' வியர்த்தது.

''அவருடைய செந் நீரைத் தரையில் வடியச் செய்தோம்'' (இசை. 63:6).

''அவருடைய வியர்வை பெரும் இரத்தத்துளிகளாக நிலத்தில் விழுந்தது'' (லூக். 22;44) இதுவே அவர் அடைந்த மாபெரும் வேதனை. ''நான் பூங்காவனத்தில் . பட்டபாடுகளை எந்த மனிதனாலும் விளங்கிக் கொள்ள முடியாது'' என்று கிறிஸ்து யேசு மார்கறித் மரியம்மாளுக்குக் காட்சியிற் கூறியதே இதற்கு போதுமான அடையாளமாகும்.



# மனிதத்தை வாழவைப்போம்

★ ச. மாக்கஸ்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

இந்த மண்ணில் மனிதம் வாழ முடியும். அது வாழத் தான் வேண்டும் என்பதற்காக தன்னை தியாகம் செய்த விடுதலை வீரன் இயேசுவின் புனிதமான உன்னதமான தியாகத்தை நினைவுகூரும் காலம். தான் இந்த அருள்தரும்காலம் இந்த விடுதலை வீரன் மனிதத்தின் மேல் அதிக காதல் கொண்டவன், அத்துடன் இந்த காலம் ஒரு பெரும் அழைப்பை விடுத்துக் கொண்டிருக்கும் ஒரு காலமாகவும் அமைகின்றது. அது என்ன அழைப்பு என்றால் அந்த விடுதலை வீரனின் முழு மனித விடுதலைப் பணியை, புனிதமான பணியை தொடர்ந்துசெய்யும் அழைப்பு.

இந்த விடுதலை வீரன் இயேசு மனிதம் அழிக்கப்பட்ட போது, விதைக்கப்பட்டபோது அது கீழ்த்தரமாக மதிக்கப் பட்டபோது புயலாக எழுந் தான். எதிர்ப்புக்களைக் கண்டு அவர் பின்வாங்கவில்லை. மாறாக முழுமனித வி தலையை தனது குறிக்கோளாகக் கொண்டு முன்னேறினார். தனது பயணத்தில், தனது பாதையில். அவரின் பாதை முட்கள் நிறைந்த பாதை, எதிர்ப்புக்கள் எழுந்தபாதை, இரத்தம் தோய்ந்தபாதை தியாகம் வேண்டி நிற்கும் பாதை.

இயேசுவின் முழுமனித விடுதலைப் பணி அரசியலை மட்டுமோ அல்லது ஆன்மீகத்தை மட்டுமோ மையமாக கொண்டிருந்த ஒன்றல்ல, மாறாக இரண்டையும் உள்ளடக்கிய ஒரு முழு மனித விடுதலையை மையமாகக் கொண்ட ஒன்று. இந்த புனிதமான விடுதலைப் பணி மனிதனின் ஆன்மீகம், அரசியல், பொருளாதாரம், சமூகம் போன்றவற்றை உள்ளடக்கிய ஒன்று. இவற்றில் காணப்படும் அடக்குமுறைகளில் இருந்து மனிதம் விடுதலை பெற்று வாழவேண்டும் என்பதே அவரின் நோக்கமும் அவருடைய தந்தையின் திட்டமும் ஆகும்.

இந்த புனித பணிக்கு எமது வாழ்வைத் திருப்புவதும் அதற்கு ஏற்றவாறு எமது வாழ்வை மாற்றி அமைப்பதும் இந்த காலத்தில் முக்கியமானது. இந்த பணியானது தனியே மனித முயற்சிகளினால் மட்டும் செய்யக்கூடிய ஒன்றல்ல, மாறாக இறைவனுடன் கொள்ளும் நெருங்கிய உறவினால் தான் முடியும்.

எமது மனமாற்றத்தின் வழியாக நாம் ஆரம்பிக்கும் புதிய வாழ்வு, மற்றவர்களின் வாழ்வை மையமாக கொண்டிருக்க வேண்டும். எமது வாழ்வு முழுமையாக, நிறைவாக மற்றவர்களுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும். எனது தியாகம் நிறைவுள்ளதாக, எனது வாழ்வு அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டுமானால் முதலில்எம்மை நாம் முழுமையாக அறிந்து கொள்ளவேண்டும். எம்மை நாம் கண்டுகொள்ளும் காலம்தான் இந்த அருள்தரும் காலம்.

என்னுடைய வாழ்வின் குறைகள், நிறைவுகள், வளர்ச்சிகள் ஆகியவற்றை அறியும் போதுதான் என்னால் என்னை முழுமையாகசொடுக்கமுடியும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் எங்கே செல்லுகின்றோம்? எங்கே நிற்கின்றோம்? எமது வாழ்வு எதனை மையப்படுத்தியுள்ளது? எமது குறிக்கோள் என்னவாக அமைந்துள்ளது என்பதைப்பற்றி சற்று ஆராய்வோம். எம்முள்ளே சற்று ஆழமாக போக முற்படுவோம்.

எம்மை நாம் அறிந்த பின்னர்தான் எமது சமுதாயத்தில் புதைக்கப்பட்டிருக்கும் மனித பண்புகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும். சிதைக்கப்பட்டிருக்கும் மனிதத்திற்கு உயிர்கொடுக்கமுடியும் அத்துடன் எவ்வாறு கிறிஸ்தவ விழுமியங்களை விதைப்பதன் மூலம் அதனை வளரவைக்க முடியும் என்பதை அறியமுடியும்.

# மரணத்தை வென்ற மாவீரன்

வெள்ளியன்று பிற்பகலில் மரித்த இயேசு
வேந்தனவர் மலையிலே அடக்கமானார்
கள்வர்களும் ஓய்வெடுப்பர் சனியில் அன்று
கட்டாய விடுமுறை நாள் யூதருக்கு!
பிள்ளைகளும் பெரியோரும் மாதர் தாமும்
பேதலித்துச் சனிமுழுதும் ஓய்ந்திருந்நார்!
வெள்ளி முளை பெற்றெழுந்து ஞாயிறன்று
விடிகின்ற போதினிலே குதித்தெழுந்தார்.

அந்நேரம் கல்லறையைக் காவல் காத்த
ஆயுதத்தார் பெருவீரர் பூமியின் மேல்
மின்னலுடன் இடவந்து மோதிற்றேபோல்
மிகப் பெரிய பூகம்பம் நிகழக் கண்டார்!
வெண்ணிறத்தில் ஒரு தூதன் வானைவிட்டுப்
பூமிக்கு வருவதனை அவர்கள் பார்த்தார்.
அன்னவனும் கல்லறையில் கல்லை நீக்கி
அதன் மீது அமர்வதையும் அவர்கள் கண்டார்.

தூதனவன் திருவுருவம் மின்னல் போலும்
தூய்மை உடைவெண்ணிறத்துப் பனியைப் போலும்
நாத வடிவாக அவன் நிற்கக் கண்டு
நடையிழந்து படைவீரர் மயங்கி வீழ்ந்தார்!
மாதர்களும் வைகறையிற் கல்லறைக்கு
வாசமிகும் பொருளோடும் வந்து சேர்ந்தார்
பாறைகள் தாம் விலகியதும் தேவ தூதன்
பக்கத்தில் இருப்பதுவும் திகைத்தே பார்த்தார்!

ஆண்டவரின் திருத்தூதன் அவரைப்பார்த்து,
அறையுண்டு மரித்தவரைப் பார்க்க வந்தீர்
ஆண்டவரின் உடல் இல்லை உரைத்த வாறே
இயேசு பிரான் உயிர்த்தெழுந்தார் இங்கே நீங்கள்
வேண்டுமெனில் சடலத்தை வைத்த அந்த
வியப்புமிகு கல்லறையைப் பார்த்துச் செல்வீர்!
காண்டரிய செய்தி தன்னைக் கண்டபின்பு
கட்டாயம் சீடரிடம் போய்ச் சொல்லுங்கள்!


எனக் கூறி திருத்தூதன் முடித்தான்; வந்த
எல்லோரும் கைப்பொருளை கீழே போட்டு
மனக்குமுறல் கொண்டுள்ள சீடருக்கு
மகத்தான சேதி சொல்லப் புறப்பட்டார்கள்!
தமைக்கண்டு யார்பேசினாலும் கூடத்
தாம் கண்ட காட்சியினை மறைத்தவாறே
ஜனக் கூட்டம் சீடரையே தேடிச் செல்லும்
தலைவனவன் உயிர்த்த கதை சொல்வதற்கு!

ஆக்கம்: G. F. கனிசியஸ் றாஜ்
புனித மாட்டீனார் குருமடம்,
யாழ்ப்பாணம்.

# எத்தனைமுறையும் மன்னிக்கலாம்

இறை சித்தம் தனை ஏற்று
இப்புவி மீது வந்து
மறைஞான வெளிப்பாடாய்
மலைப் பொழிவில்
மனித மாண்பின்
மன்னிப்பின் பெருமை சொன்னார்
குறைகாண ஒரு கூட்டம்
கூடி வந்த வேளையிலே
தேடி வந்த வழிதனிலே
எடுத்த கற்கள் போட்டுவிட்டு
ஏற்றுத் தம் பிழைகளையே
மாற்றங் கண் டேகினரே.
கொடுத்த வாக்குறுதியை மறந்து
கோணல் புத்தியினாலே
கொட்டி விட்டார் இராயப்பர்
கோமகனை மறுதலித்தார்
எட்டி நின்றழுத ஈரவிழி
தட்டிக் கொடுத்தார்
தவறை உணர வைத்தார்.
கத்தி வாளுடன் ஒருகூட்டமாய்
முத்தம் கொடுத்து
தத்தம் செய்தான ஒரு நண்பன்
பித்தனையும் மன்னித்தார் பிரபு
இரத்தப் பழிவிடுமா அவனை
சித்தம் கலங்கி நாண்டு செத்தான்.
இத்தனையும் போதா தென்று
எத்தனை கொடுமை செய்தார்
முள்ளில் முடி சூடி
எள்ளி நகை யாடி
மூர்க்கத் தனம் செய்து
ஏற்றினார் சிலுவையிலே
தூற்றினார் துரோகக் கும்பல்
மாற்றினா ரில்லை.
மறைவள்ளல் தன்வழியை
சாற்றினார் சாகும் வேளையிலும்
சகலரையும் மன்னியும் தந்தா யென்று
எத்தனை முறையும் மன்னிக்கலாம்
கர்த்தனைப் போல நமக்கும்
கனிந்த உள்ள மிருந்தால்

● நிதர்சனன்
49, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.



# பயனுள்ள தவவாழ்வு

★ ச. அன்ரன் சேவியர்
யாழ். புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி

எம் பெருமான் கிறிஸ்துவின் பாடுகள் அனைவரின் மீட்புக்கும் காரணமானது என்ற தெளிந்த புதிய ஏற்பாட்டு இறையியல் பார்வை, சமுதாய வாழ்விற்காக, சமுதாய மேம்பாட்டிற்காக, சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்காக, கிறிஸ்துவைப் போல் துன்பங்களை ஏற்கவேண்டுமென்று அழைப்பு விடுக்கின்றது, எமக்கு வரும் சவாலை ஏற்கவும் தூண்டுகின்றது.

ஆதிக் கிறிஸ்தவர்கள்-அப்போஸ்தலர்கள் காலத்தில், தவக்காலமும் இதன் இறுதியில் வரும் 'ஈஸ்டர்' திருநாளும் தான் மிகப் பெரிய விழாவாகக் கருதப்பட்டன. யேசுவுடைய பிறப்பைவிட அவரது உயிர்ப்பு உன்னதமானது. அவரது வாழ்வை விட அவருடைய இரத்த யாத்திரையும் சிலுவைச்சாவும் அளவற்ற மகிமை பொருந்தியவை என்பது மக்களின் விசுவாசம். ஏனென்றால், அந்தப் பாடுகளும், அவரது மரணமும் தான் உலகத்தின் கவனத்தைத் திருப்பின. எனவே செய்த பாவங்களிலிருந்து முழுமையாக விடுதலை பெறவும், மனிதர்களுக்கு உரிமையும் கடமையும் உண்டு'' என்ற நம்பிக்கையை அது ஊட்டியது.

தியாகம் என்பது நம்முடைய இயல்பான மனிதத் தன்மை மட்டுமல்ல, அதுவே நம் மதத்தின் தன்மையும் கடமையுமாகும். ''விதைக்கப்பட்ட கோதுமைமணி அழிந்தால் தான் அது ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பல்லாயிரம் என்று விளையும்'' என்ற சாதாரண விவசாயக் கருத்தை தம் ஒட்டுமொத்த வாழ்விற்கும் ஓர் உருவகமாக்கிவிட்டார் அண்ணல் யேசு. இத்தகைய பிரதிபலிப்புக்களையும், காரியங்களையுமே தம்முடைய மக்களாகிய நம்மிடமும் அவர் எதிர்பார்க்கிறார். 'எதையும் பெறுவதற்காக அல்ல, எல்லாவற்றையும் தருவதற்காகவே நான் உங்களிடையே வந்திருக்கிறேன்' என்பதை வெறும் வார்த்தைகளாலல்ல, தம் ஓய்வற்ற உழைப்பாலும், உறங்காத திக்கவல் உணர்வுகளாலும், எல்லையற்ற தியாகத்தாலும் கண்கூடாக நிரூபித்தவர் யேசு.

அவரோடு ஒப்பிடும் போது, நம்மில் யார் யாருக்குச் செய்கிற தியாகத்தைத்தான் நாம் பெரிதாக எண்ண முடியும்? நாடு பிடிக்கும் ஆசையில்லை, அரசியல் நோக்கமில்லை, அதிகாரமோசமில்லை, சொத்து நலமென்று எதுவுமில்லை, இன்னும் கூறப்போனால் இனம், மொழி என்ற எல்லைகூட இல்லை, ஆனால் ஒட்டுமொத்த மனித சமுதாயத்தின் பாவ விடுதலைக்காக ஒரு தனி மனிதர் சாவைத் தழுவினார்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## இறையரசில் ..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவன் சாகடிக்கப்படுகின்றான், ஆனால் பாதிக்கப்படுகின்ற கூட்டம் என்றும் பதுங்கித் தான் இருக்கவேண்டுமென்ற நியதி இல்லை. அவர்களது நெஞ்சிலே விழுகின்ற நீதியின் தாக விதைகளை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது. அவைகள் முளைத்து வளர்ந்து பலன் அளிக்கும் நாளில் பலரது முகமூடிகள் கிழியும். சூழ்நிலைகள் மாறும். அன்று உலகில் உயிர்ப்புக்கு புது அர்த்தம் பிறக்கும். நாமும் இறக்கவேண்டும் சுயநலத்தில், அநீதியில், அவநம்பிக்கையில். எதற்காக? இறையரசில் நிரந்தரமாக உயிர்ப்பதற்காக.

# இயேசுவை நோக்கிய தேடல்

இறைமக்கள் ஆகிய நாம் இறைவன் காட்டும் பாதையில் அவரை நோக்கி அவரைப் பின்பற்றி வாழ அழைக்கப்படுகின்றோம். இயேசுக் கிறிஸ்துவின் அன்பர்களாக, அவரின் சகோதரர்களாக, இருக்க வேண்டிய நாம் அவரைக் காணமுடியாமல் துடிக்கின்றோம். அவரை நாம் ஆசிரியர் என்கின்றோம், ஆனால் அவருக்கு கீழ்ப்படிவதில்லை. அவரே எமது ஒளி என்கின்றோம், ஆனால் அந்த ஒளியைக் காண மறுக்கின்றோம். அவர்தாம் எமது வாழ்வுப் பாதை என்கின்றோம், அந்தப் பாதையை விட்டு பசாசின் பாதையில் சென்று தவிக்கின்றோம். மீள முடியாமல் அவரைத்தான் என் வாழ்வின் ஊற்று என்கின்றோம், அந்த இன்சுவை ஊற்றை பருக காலம் தாழ்த்துகின்றோம். எமது அறிவின் கடல், அருளின் வள்ளல் என்றெல்லாம் சொல்லுகின்றோம். அந்த அறிவை அருளை அடைய முயற்சி எடுப்பதில்லை. அவர் எம் காதலன் ஆனால் நாம் அவரை உண்மையாக அன்பு செய்வதில்லை. அவரே எம் கதி அவரே எம் தெய்வம் என்று சொல்லிக் கொண்டு திரிகின்றோம், ஆனால் இன்றுவரை அவரைத் தேட நாம் முயற்சி எடுக்கவில்லை.

**கடவுளாக இருக்கும் இயேசு**

இயேசுக்கிறிஸ்து இரண்டு சுபாவம் கொண்டவராகக் காணப்படுகின்றார். அவர் முழு இறைவனாகவும் அதே வேளை முழு மனிதனாகவும் இருக்கின்றார். அவர் இறைவனின் ஒரே அன்பார்ந்த மகன் கட்புலனாகா கடவுளின் சாயல், படைப்புக்கெல்லாம் தலைப்பேறானவர் — இயேசுக் கிறிஸ்து ஆரம்பமும் முடிவுமாக இருக்கின்றார் (கொலோ. 1.15) என்று புனித சின்னப்பர் இயேசுவின் இறைவடிவத்தைப் பற்றி எடுத்துரைப்பதைக் காண்கின்றோம். அவராலேயே அவருக்காகவே அனைத்தும் உண்டாயின, உருவாக்கப்பட்டன. இந்த இறைமகன் மனிதருக்கும், இயேசுவுக்கும் பாலமாக இருக்கின்றார். இவர்கள் இருவரையும் இணைக்கும் கருவியாக இவர் காணப்படுகின்றார்.

**மனிதனாக இருக்கும் இயேசு**

எப்படியாக இறைவன் கடவுளாக இருக்கின்றாரோ அதே போன்று இவர் மனிதனாகவும் இருக்கின்றார்? எப்படியாக இவர் எம்மையும் இறைவனையும் இணைக்கும் பாலமாக இருக்கின்றார்? இறைவனாக இருக்கும் இயேசு எம்மேல் கொண்ட அன்பினாலும் தம் தந்தைக்கு கீழ்ப்படிந்தமையினாலும் மனித சுபாவம் எடுத்து கன்னி மரியின் உதரத்தில் அவதரித்தார். அவரும் நாமும் மனிதரின் மக்கள். ஆனால் அவர் எம்மை விட மேலானவர். ஏன் என்றால் அவர் அதேவேளை இறைவனின் சொந்த மகனுமாய் இருக்கின்றார். மனிதனை மதிக்கின்றார். அவர் மனித கையாலே தம் தந்தை சூசைக்கு உதவி செய்தார். மனித எண்ணத்துக்கு ஏற்ப நடந்தார். மனித அறிவை பயன்படுத்தி சிந்தித்தார். அதனிலும் மேலாக மனித உள்ளம் கொண்டவராக எம் எல்லோரையும் அன்பு செய்தார். அதற்காக தம் உயிரையே அர்ப்பணித்தார். எல்லாவித நடைமுறைகளிலும் மனிதனைப் போன்று இருந்தார். ஒன்றைத் தவிர, அதுதான் நாம் செய்யும் பாவம்.

**எங்கே காண்போம் அவரை?**

இந்த வேளையிலே இறைவனை, இறைமகன் இயேசுவைக் காணத்துடிக்கும் நாம் சின்னஞ் சிறியவர்களில் நாம் எம்மை ஒன்றித்து வாழ்வதின் மூலம் அயலவரின் வாழ்வுக்கு அர்த்தம் கொடுப்போம். இறைவன் மனிதனையும், மனித மாண்பினையும் அதன் மகத்துவத்தையும் மதித்ததுபோல் நாமும் மனித மாண்புக்கு மகத்துவம், மதிப்புக் கொடுத்து வாழ உறுதி எடுப்போம், ஒடுக்கப்பட்டு, அழிவு கொண்டு அவதியுறும் நாம் இந்தத்துன்ப வேளையிலே இறைவனைத் தேடுவோம். எம்மிடம் இருப்பதைக் கொண்டு வறியவருடனும், ஒதுக்கப்பட்டோருடனும் எம்மையே பகிர்ந்து வாழ்வதன் மூலம் இறைவனைக் கண்டு கொள்வோம். அன்பு, நீதி, பகிர்வு, சகோதரத்துவம் என்னும் இயேசுவின் புதிய படிப்பினைகளுக்கு மகத்துவம் கொடுத்து இயேசுவை அதிலே கண்டு கொள்வோம். இறுதியாக எமக்கு ஏற்படும் சோதனைகள், வேதனைகள், துன்பங்கள், துயரங்கள், கொடுமைகள், அழிவுகள், அனர்த்தங்கள், ஏமாற்றங்கள் இழப்புக்கள் என்பவற்றை மனமகிழ்வுடன் ஏற்று வாழ்வதன் மூலம் இறைவன் இயேசுவைக் கண்டு கொண்டு அவருடன் அவருக்காகவே, அவரைப் போன்று வாழ வழி சமைப்போம்.

அருட்சகோதரன் அ. சூசை
புனித சவேரியார் குருமடம்,
கொழும்புத்துறை.



# உத்தான வாழ்விற்கு வித்தான காலம்

● மோ. மாற்கு யேசுதாசன்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுண்ணாகம்.

தவக்காலம் உளமாற்றத்தின் காலம், இரக்கத்தின் காலம், ஒப்புரவின் காலம், எம்மை மீளாய்வுசெய்து புதுப்பிக்கும் காலம், இறை அருளின் காலம்; செபதப ஒறுத்தல் முயற்சிகளூடாக உயிர்ப் விழாவுக்கு எம்மைத் தகுதியுடையோராக்கும் காலம், உயிர்ப்பு விழா வெறும் வழிபாட்டோடு முடிவடைவதல்ல. நாம் தவக்காலத்தில் வாழ்ந்துவிட்ட வாழ்க்கையினால் எம்மில் ஏற்படுத்திய ஒப்புரவினூடாக உயிர்த்த கிறிஸ்துவை பகைவரிலே காண, அந்தக் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக உன் வாழ்வு ஏனையோர் மத்தியில் பிற மதத்தவர் மத்தியில் மிளிரத்தரப்படுகின்ற பொற்காலம் என்றால் அது மிகையாகாது. தவக்காலத்தைத் தொடர்ந்து வரவிருக்கும் பெருவிழாவாகிய பாஸ்கா விழாவிற்கு உயிர்ப்பு விழாவிற்கு ஆவலோடு காத்திருக்கின்றோம்.

ஆனால் தவக்காலத்தை மட்டும் தகுந்த விதத்தில்பயன்படுத்த உன் அருகில் அடுத்த வீட்டிலுள்ள அயலவனோடு உறவினரோடு உடன்பிறந்த சகோதரனோடு மனத்தாங்கலை, பகைமையை வளர்த்து உள்ளத்தைக் கடினப்படுத்திக் கொண்டு; அவனை மன்னித்து ஏற்று, மதித்து வாழ; அவனிலே கிறிஸ்துவைக்காண, பகிர மனதற்ற நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றாய். ''என் பகைவனுக்கும் எனக்கும் பாலம் ஒன்று அமைத்திரே யேசுவே'' என்று அழகாய் பாடுகின்றாய். அதன் அர்த்தம் புரிந்தாயா? இருவர் மேலும் சாத்தான் ஏறிச் சவாரி விடுவதற்கா பாலம்? உன் பகைவனை, அயல்வனை மன்னித்து, ஏற்று வாழ மறுத்து உன் இதயக் கடினத்தால் மீண்டும், மீண்டும் யேசுவைச் சிலுவையில் அறைகின்றாய். ஈட்டியால் குத்தித் துளைக்கின்றாய். அவரைச் சிலுவையிலேயே தொங்க வைக்கின்றாய்.

உயிர்ப்பு விழா திருச்சபை வரலாற்றில், மிக உன்னதமான கொடுமுடியான விழா. கிறிஸ்து உயிர்க்கவில்லை என்றால் எமது விசுவாசமே வீண், அர்த்தமற்றது என்கின்றார் புனித சின்னப்பர். அவரது உயிர்ப்பிலே தான் எமது விசுவாசம் கட்டி எழுப்பப் படுகின்றது. அப்படியாயின் அந்த விழா எவ்வளவு முக்கியமானது என்பதை யோசித்துப்பார். அதற்கு உன்னைத் தகுதியாக்க வேண்டுமெனில் உன் அயலானில் நீ அவரைக் காண வேண்டும். மன்னித்து ஏற்று வாழவேண்டும். எனவே இவ் விழாவிற்கு உன்னைத் தகுதியாக்கும் பொருட்டு உன் கண் முன்னே இருக்கும் காலத்தைக் கருத்துடன் பயன் படுத்து. உன்னில் இருக்கும் நான் என்ற ஆணவம், அகங்காரம், மற்றவனை மதிக்காது மிதித்து

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# எங்கு செல்கின்றாய்?....

மாபரனே மாமணியே எங்கு செல்கின்றாய்;
மானிடர் நமக்காய் எங்கு செல்கின்றாய்;
வேந்தனே, திருவடிவே எங்கு செல்கின்றாய்;
வேரறுந்த மரங்களாகிய எமக்காய் எங்கு செல்கின்றாய்;
மானிடர் நமக்காய் வந்தாய் — தரணியில்
மாண்ட எம்மை விடுவித்தாய் — ஐயா
மானிடர் எம்மை விட்டு
மாபரனே எங்கு செல்கின்றாய்
மனிதா என்னண்டை வா என்ற அழைப்பிற்கு
மறுப்புத் தெரிவித்த பாவிகளையா
இவையெல்லாம் இருந்தும் — எம்
இதயங்களில் அன்பைப் பொழிந்து எங்கு செல்கின்றாய்;
பாதையைக்காட்டினாய் — உன்
பாடுகளின் பாதையால் — என்
வாழ்வை திளைக்க வைத்து
வாழ்வாக்கினாய் — உன்
கருணையினால் எனை ஈர்ந்து — என்
கவலை போக்கியே
கருணா நீ எங்கு செல்கின்றாய்
களங்கம் காண நீயும்
கல்வாரி நோக்கி — எனக்காய்
கனியமுதே எங்கு செல்கின்றாய்
அடிமுதல் முடிவரை
அடியற்ற மரம்போலப் படிமேல் விழுந்து — நீயும்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
இறுதி வரினும் உறுதி கூறி — நீயும் —
உடல் பொருள் ஆவி மூன்றையும் ஒப்புவித்து
உற்றோர் அழ மற்றோர் மகிழ
உண்மையின் தேவா எங்கு செல்கின்றாய்;

செ. சே. றவிக்காந்த்
புனித மடுத்தினார் குருமடம்,
யாழ்ப்பாணம்.

# பாவம் பலுகிவிட்டது! பதறாதீர்கள்!!

★ அருள்சகோதரர் பத்திநாதர்
புனித சவேரியார் குருமடம், கொழும்புத்துறை.

''சிலோவாமில் கோபுரம் விழுந்து பதினெட்டு பேரை கொன்றதே. அவர்கள் ஜெருசலேமில் வாழ்ந்த மற்றெல்லாரையும் விடக் குற்றவாளிகள் என்று கருதுகிறீர்களா? அப்படியன்று என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மனம் திரும்பாவிடில் நீங்கள் எல்லோரும் அவ்வாறு அழிவீர்கள்.'' (லூக். 13 : 4 - 5)

உலக வரலாற்றிலே உலகிலே சண்டை நடக்காத காலம் இல்லையென்றே வரலாறு கூறுகின்றது. காரணம் இந்த உலகிலே ஒவ்வொரு நாளும் எங்கோ, எப்படியோ, ஏதோ ஒரு பிரச்சினை அல்லது சண்டை நடந்து கொண்டே இருக்கின்றது. சண்டைகளும் சாதாரணமானவை அல்ல. மனிதனின் புனிதமான உயிர் பறிபோகும் அளவிற்கு அலங்கோலமான, சாவுகள், மரணங்கள், மலிந்து கொண்டு போகின்றன. கடவுளின் சாயலாக படைக்கப்பட்டான் மனிதன். சமத்துவமாக வாழ படைக்கப்பட்டான் மனிதன். ஆனால் இன்று மனிதன் மனிதனையே மதிக்காத காலம், மனித மாண்பு பேணப்படாத காலம் இது.

இன்று எத்தனையோ கிறிஸ்தவ நாடுகளில் பிளவுகளும், பிரிவினைகளும், கொலைகளுமே நடமாடுகின்றன. கிறிஸ்தவ விழுமியங்கள் பிணமாகிவிட்டன. கிறிஸ்தவர்கள் மட்டுமன்றி மக்கள் தொகை தொகையாக மடிகின்றனர். கிறிஸ்தவ விழுமியங்களிலே, கிறிஸ்தவ பண்புகளிலே வாழ படைக்கப்பட்ட நாம் இத்தொல்லைகள் எல்லாம் ஏன் எமக்கு என்று சிந்திக்கின்றோமா? நாம் நினைப்பதுபோல் எம்முடைய பதவி மோகமும், வின் பேராவலும், ஆசையும்தான் இதற்கு காரணம் என்று மட்டும் நினைப்பது தவறு. இன்று எம் நாட்டிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் இடம் பெறும் சண்டைகள் பிரச்சினைகளுக்கும், பிரிவுகள் பிளவுகளுக்கும், கொலைகள் கொள்ளைகளுக்கும் எமது பாவம்தான் காரணம் என்று நாம் ஒவ்வொருவரும் உணரவேண்டும். இப்பாவம் இன்று பாரினில் பலுகிவிட பாவம் பெருகிவிட்டது.

எமது நாட்டிற்கு சமாதானம் வேண்டும், அமைதி வேண்டும், எமக்கு நிம்மதி வேண்டும், சந்தோஷம் வேண்டும் என்று நாம் ஒவ்வொருவரும் விரும்புகின்றோம். ஆட்சி அமைப்புக்களையும், கட்சி அமைப்புக்களையும் பற்றி விண்விவாதம் பேசுகின்றோம். ஆனால் இவை ஏன் எமக்கு நிகழ்கின்றன என்று எண்ணுகின்றோமா? இதுவே தகுந்த நேரம். ஆண்டவரின் பாடுகள், மரணம் பற்றி சிந்திக்கும் இந்த தவக்காலத்திலே, எமது நாடு உட்பட பல்வேறு நாடுகளிலும் இடம் பெறுகின்ற அனர்த்தங்களையும், அழிவுகளையும் மக்களின் பாடுகளையும் துன்ப துயர நிகழ்வுகளையும் நினைப்போம்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

# மன்னார் மறைமாவட்ட திராட்சைத் தோட்டத்தில்

# புதிய திருமறைப் பணியாளர்கள்



அருள்சகோதரன் கி. அந்தோனிதாஸ் டலிமா எதிர்வரும் சித்திரைத் திங்கள் 27ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மடுஅன்னையின் திருத்தலத்தில் மன்னார் ஆயர் பேரருள்திரு. இரா. யோசவ் ஆண்டகை அவர்களால் பணிக்குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

1963ஆம் ஆண்டு ஆவணிமாதம் 19ஆம் திகதி பிறந்த இவர் பெரிய பண்டிவிரிச்சான் புனித மரிய கொறற்றி ஆலயப் பங்கைச் சேர்ந்த காலம் சென்ற திரு. ஆ. கிறிஸ்ரோப்பர் டலிமா, திருமதி மரியராணி பீரிஸ் தம்பதியரின் மூத்த புதல்வராவார்.

இவர் தனது ஆரம்ப, இடைநிலைக்கல்வியை பெரிய பண்டிவிரிச்சான் அ. த. க. வித்தியாலயத்திலும், சிறிது காலம் வங்காலை புனித ஆனாள் மகாவித்தியாலயத்திலும், உயர்கல்வியை முருங்கன் மகாவித்தியாலயத்திலும் கற்றுத்தேர்ந்தார்.

1984இல் யாழ். புனித மடுத்தீனார் குருமடத்தில் சேர்ந்த இவர் 1986இல் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மெய்யியல், இறையியல் பயிற்சியைப் பெற்றார்.

இவர் தனது முதல் திருப்பலியை 28.04.95 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு பெரிய பண்டிவிரிச்சான் புனித மரியகொறற்றி ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.



அருள்சகோதரன் பி. கிறிஸ்துநாயகம் எதிர்வரும் சித்திரைத் திங்கள் 27ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 5-00 மணிக்குமடு அன்னையின் திருத்தலத்தில் மன்னார் ஆயர் பேரருள்திரு இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்களால் பணிக்குருவாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

1965ஆம் ஆண்டு ஆனி மாதம் 2ஆம் திகதி பிறந்த இவர் நானாட்டான் புனித அடைக்கல அன்னை ஆலயப் பங்கைச் சேர்ந்த காலம் சென்ற திரு. நீக்கிலாப்பிள்ளை பிலிப்புப்பிள்ளை, திருமதி திரேசம்மா தம்பதியரின் கடைசி மகனாவார்.

இவர் தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை நானாட்டான் மகாவித்தியாலயத்திலும், உயர் கல்வியை மன்னார், புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்,

1984இல் யாழ் புனித மடுத்தினார் சிறிய குருமடத்தில் சேர்ந்த இவர் 1986இல் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியல் சேர்ந்து மெய்யியல், இறையியல் பயிற்சியைப் பெற்றார்.

இவர் தனது முதல் திருப்பலியை 29-04-95 சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் ஒப்புக் கொடுப்பார்.



அருள்சகோதரன் ம. ஜெயபாலன் எதிர்வரும் சித்திரைத் திங்கள் 27ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மடுஅன்னையின் திருத்தலத்தில் மன்னார் ஆயர் பேரருள்திரு. இரா. யோசவ் ஆண்டகை அவர்களால் பணிக்குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

1967ஆம் ஆண்டு மாசிமாதம் 10ஆம் திகதி பிறந்த இவர் பறப்பாங்கண்டல் புனித சிந்தாத்திரை மாதா ஆலயப் பங்கைச் சேர்ந்த திரு. அ. மரிசால்பிள்ளை திருமதி. சபினம்மா தம்பதியரின் புதல்வராவார்.

இவர் தனது ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வியை பறப்பாங்கண்டல் றோ. க. த. க. பாடசாலையிலும், உயர்தரக்கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

1983இல் யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் சேர்ந்த இவர் 1986இல் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் குருமடத்தில் இணைந்து மெய்யியல், இறையியல் பயிற்சியைப் பெற்றார்.

இவர் தனது முதல் திருப்பலியை 28.04.95 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு பறப்பாங்கண்டல் புனித சிந்தாத்திரை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.



அருள் சகோதரன் டே. அலெக்ஸ்சாண்டர் சில்வா (பெனோ) எதிர் வரும் சித்திரைத் திங்கள் 25ஆம் நாள் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில், மன்னார் ஆயர் பேரருள்திரு இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்களால் பணிக்குருவாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

1967ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 21ஆம் திகதி பிறந்த இவர் தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலய பங்கைச் சேர்ந்த திரு. K. W. டேவிற் சில்வா திருமதி சவிரியம்மா புனிதம் குருஸ் தம்பதியரின் மூத்த புதல்வராவார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை தாழ்வுபாடு றோ. க. த. பாடசாலையிலும, இடை நிலைக் கல்வியை தலைமன்னார் புனித லோறன்ஸ் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

1981இல் யாழ் புனித மடுத்தினார் சிறிய குருமடத்தில் சேர்ந்த இவர் 1986 இல் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மெய்யியல், இறையியல் பயிற்சியைப் பெற்றார்.

இவர் தனது முதல் திருப்பலியை 26-04-95 புதன்கிழமை காலை 9-00 மணிக்கு தாழ்வுபாடு புனித சூசையப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்'

# ஆயர் மன்ற புதிய நியமனங்கள்

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

நீதிக்குழு — அதிவந். எல்மோ பெரேரா (தவிசாளர்),
அதிவந். ஒஸ்வால்ட் கோமிஸ்,
அதிவந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை.

தேசிய கத்தோலிக்க மறை அறிவிப்புப் பணி ஆணைக் குழு:-
அதிவந். றேமன்ட் பீரிஸ் (தவிசாளர்),
அதிவந்.இராயப்பு யோசவ் (துணைத் தவிசாளர்).

தேசிய கத்தோலிக்க கல்வி, மறைக்கல்வி, வேதாகமப் பணி ஆணைக் குழு:-
அதிவந். ஒஸ்வால்ட் கோமிஸ் (தவிசாளர்),
அதிவந். இராயப்பு யோசவ் (துணைத் தவிசாளர்).

தேசிய கத்தோலிக்க கிறிஸ்தவ ஒன்றிப்புக் கலந்துரையாடல் ஆணைக் குழு:-
அதிவந். நிக்லஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ (தவிசாளர்),
அதிவந், W, டொண் சில்வெஸ்டர் (துணைத்தவிசாளர்).

தேசிய கத்தோலிக்க சமூகத்தொடர்பு ஆணைக் குழு:-
அதிவந். பிராங்க் மார்க்கஸ் பெர்னாண்டோ (தவிசாளர்),
அதிவந். தோமஸ் சவுந்தரநாயகம் (துணைத்தவிசாளர்).

தேசிய கத்தோலிக்க குருத்துவக் கல்லூரி மாணவர்கள், குருக்கள், துறவிகள், உலகுசார் துறவிகள் ஆணைக் குழு:-
அதிவந். வியான்னி பெர்னாண்டோ (தவிசாளர்),
அதிவந். தோமஸ் சவுந்தரநாயகம் (துணைத்தவிசாளர்)
அதிவந. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ (துணைத் தவிசாளர்).

தேசிய கத்தோலிக்க திருவழிபாடு கலாசார ஆணைக் குழு:-
அதிவந். தோமஸ் சவுந்தரநாயகம் (தவிசாளர்),
அதிவந். பிராங்மார்க்கஸ் பெர்ணாண்டோ (துணைத் தவிசாளர்).

தேசிய கத்தோலிக்க பொது நிலையினரின் ஆணைக் குழு:-
அதிவந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை (தவிசாளர்),
அதிவந். எல்மோ பெரேரா (துணைத் தவிசாளர்).

தேசிய கத்தோலிக்க நீதி, சமாதானம், மனித முன்னேற்ற ஆணைக் குழு:-
அதிவந். மல்கம் றஞ்சித் (தவிசாளர்),
அதிவந். இராயப்பு யோசவ் (துணைத் தவிசாளர்).

தேசிய கத்தோலிக்க மேய்ப்புப் பணி பராமரிப்பு, இடம்பெயர்ந்தோர் சிறைச்சாலை ஆணைக் குழு:-
அதிவந். எல்மோ பெரேரா (தவிசாளர்),
அதிவந். நிக்கலஸ் மாக்கஸ் பெர்னாண்டோ (துணைத் தவிசாளர்).

பொதுஜன தொடர்புகள்:- அதிவந். ஒஸ்வால்ட் கோமிஸ்.
யோசவ் வாஸ் செயலகம்:- அதிவந். வியான்னி பெர்னாண்டோ.
மெய்யியல் திருச்சபைச் சட்டத் தொகுப்பு ஆலோசகர்:-
அதிவந். இராயப்பு யோசவ் (தவிசாளர்),
அதிவந் மல்கம் றஞ்சித் (துணைத் தவிசாளர்).

## தேசிய இயக்குநர்கள்

வழிபாடு:- அருள்திரு பிலிப் அந்தனி.
"செடெக்" :- அருள்திரு யோசவ் பெனடிக்ற் தேவராஜா.
சமூகத்தொடர்பு:- அருள்திரு சிறில் காமினி பெர்னாண்டோ.
மறைக்கல்வி, கல்வி:- அருள்திரு இரஞ்சித் றோய்,
புனித வின்சன் டி போல்:- அருள்திரு பசில் விக்ரமசிங்க.
மரியாயின்சேனை:- அருள்திரு பேனாட் குயின்ரஸ் o. m. i.
கத்தோலிக்க ஒன்றியம்:- அருள்திரு சிஸ்டஸ் குருகுலசூரிய.
C, F, M. — அருள்திரு பொனிபஸ் மெண்டிஸ்.

## பாவம் பலுகி....

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றிற்கெல்லாம எம ஒவ்வொருவரின் பாவச்செயல்களும்தான் காரணம் என்பதை உணர்வோம. மனமாற்றத்தின் காலமாகிய இந்த தவக் காலத்திலே செபம், தவம் தானதருமம்செய்து பாவத்தை விட்டு விலகி ஆண்டவர் இயேசுவோடு இணைவோம். அவர் காட்டிய அன்புப் பாதையிலே செல்வோம், பாவ இருளை கருக்கி, பாச ஒளியை வளர்ப்போம். புதிய உலகைப் படைக்க புதிய உள்ளத்துடன் விழித்தெழுவோம்.

## உத்தான வாழ்...

(6ஆம் பக்கத் தொடாச்சி)

வாழும் நிலை அவ்விதமான பாவச் சார்புகளையெல்லாம் கிறிஸ்துவோடு சிலுவையில் அறைந்து அவற்றிற்கு மரித்தால் அவரோடு உத்தானமாகலாம். விழாவை வெறும் அர்த்தமற்ற வழிபாடாக்காது உயிரோட்டமுள்ள வாழ்க்கை மூலம் வாழ முற்படுவோம். உயிர்ப்பு விழாவை எம்மில் அர்த்தமுள்ளதாக்குவோம்,

நற்செய்தி படிப்போம் | 15

## இயேசுவின் அதிகாரபோதனை

### ஆர்வமிகு பதில் (சென்ற இதழ் தொடர்ச்சி)

உயிர்த்தெழுதல் பற்றிய உண்மையினை உய்த்துணர முடியாத சதுசேயர்களின் சமயோசிதமான விவாதங்களுக்கெல்லாம் சரமாரியான பதிலை இயேசு வழங்கிக்கொண்டிருக்கையில், மறைநூலறிஞருள் ஒருவன் முன்வந்து, அவர் நன்றாகப் பதிலளித்ததைக் கண்டு ''எல்லாவற்றிலும் முதல் கட்டளை எது''? என்று அவரைக் கேட்டான் (12; 28-34). மத்தேயு லூக்காவில் போல மாற்குவில் இந்தக்கேள்வி பெரியதொரு விவாதமாகக் கொடுக்கப்படாவிட்டாலும், அந்தச் சூழலில் உள்ளதை நாம் அவதானிக்க வேண்டும். மறைநூலறிஞர் என்போர் திருநூலுக்குப் பிரதி எடுப்பவர்கள். எனவே அவர்கள் திருநூலைத் தெளிவாகப் படித்தவர்கள் என்றாலும் திருநூலை வைத்துக்கொண்டே இயேசுவின் மனதைத் திருடப் பார்க்கிறார்கள். திருச்சட்டத்திற்குப் புறம்பாக இவரால் செயற்பட முடியுமா? சட்டத்தை வைத்துக்கொண்டே அதுவும் மிகவும் உன்னதமான கட்டளையை வைத்துக்கொண்டே இயேசுவைச் சோதித்தறிய முன்வருகின்றார்கள். கைப்புண்ணுக்கு கண்ணாடியா தேவை? சட்டத்தையே தந்தவர்க்குச் சட்டத்தையா தெரியாது? மக்களிடையே அதிகம் காணப்பட வேண்டியதும், மிக, மிக அவசியமானதுமான பண்புகளில் முதன்மையானது அன்பு. இந்த அன்புக்கு வரைவிலக்கணம் கூறி அதைத் தன்வாழ்க்கையில் செயற்படுத்திக் காட்ட வந்தவர் தான் இறைமகன் இயேசு.

மனிதன் ஒவ்வொருவனும் தன்னை அன்புசெய்யத் தவறுகிறான். அவனுள் புகுந்துள்ள சுயநலம், சந்தேகம், பயம், பொறுப்புணர்ச்சியற்ற தனம், பாதுகாப்பற்ற உணர்வு இவைகளினால் தன்னை இனம் காணாது, தன்னை அன்புசெய்யாது பற்பல அடிமைத்தனங்களுக்கு உட்படுகின்றான். அதனால் தனக்குள் கண்டு தானம் வழங்கமுடியாதவனாய் அயலவனின் உணர்வுகளை இனம் காணாது, அவனை அன்புசெய்ய முடியாதவனாய் திணறுகின்றான். இவை இரண்டிற்கும் இடையில் உள்ளது தானே இறையன்பு. இவ்வன்பு அணுவளவேனும்வெளிச்சமாக இல்லாமல் அவனுக்கு இருக்கின்றது. இந்நிலையில் மறைநூலைத்தந்தவர் அதிலுள்ள மகத்தான உண்மையினை தன் வாயினாலேயே அவர்கள் முன் உதிர்க்கின்றார்.

''இஸ்ராயேலே கேள்! நம் கடவுளாகிய ஆண்டவர் ஒருவரே!! ஆகவே உன்கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும். முழு மனத்தோடும், முழு வலிமையோடும் அன்பு செய்வாயாக, என்பது முதல் கட்டளை, உன்மீது அன்பு காட்டுவது போல் உன் அயலான் மீதும் அன்பு காட்டுவாயாக என்பது இரண்டாம் கட்டளை. இவற்றை விடப் பெரிய கட்டளை வேறில்லை'' என்றார், அதாவது இறை அன்பு, பிறர் அன்பு என்னும் இரு அன்பே கட்டளைகளில் மிக முக்கியம். மறைநூலின் செம்பொருள் அதுவே என்பதை இயேசு அவனுக்கு உணர்த்திய போது, அவனும் அதைச் சரியாக உணர்ந்தாற்போல, சரிதான் போதகரே! நீர் சொன்னது உண்மை, அதாவது இறை அன்பும், பிறர் அன்பும் தகனப் பலிகள், மற்றப்பலிகள் எல்லாவற்றையும் விட மேலானது என்று கூறித் தன் அனுபவத்தை இயேசுவுடன் பகிர்ந்து கொண்டான். அவன் அறிவோடு பதிலளித்ததைக்கண்டு இயேசு ''நீ கடவுளுடைய அரசிற்குத் தொலைவில் இல்லை என்று அவனைத் தட்டிக்கொடுத்து தன் உணர்வு பெற்று வாழும்படி பணிக்கின்றார். அவனை அன்போடு நோக்குகின்றார். அதனால் அதுமுதல் நேரடிப் பேச்சில் அவரின் எதிரிகள் மௌனமாகின்றனர். ஆனால் இயேசுவைக்கொல்ல மும்முரமாக செயலில் இறங்குகின்றார்கள், ஒத்துப்போ அன்றேல் இத்துப்போ, செய்துமுடி அன்றேல் செத்துமடி என்றாற்போல் இயேசுவிற்குத் தங்கள் கடைசித் தெளிவையும் வார்க்கக் காத்திருக்கிறார்கள் கல் நெஞ்சம்படைத்த அவரின் எதிரிகள்.

★ S. அந்தோனிப்பிள்ளை
மறை ஆசிரியர்

## பயனுள்ள....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

என்பது சரித்திரம் அடிக்கடி காணக்கூடிய காட்சியா?

'துன்பம்' என்பது ஒரு தத்துவம், எமது வாழ்க்கைத் தத்துவம், தனிப்பட்ட வளர்ச்சிக்கு மட்டும் பாடமாக அமையக் கூடாது. நாம் மேற்கொள்ளும் தவமும், தியாகமும், ஒறுத்தலும் நம்மை மட்டும் சரிசெய்வதோடு நின்று விடுமென்றால், கிறிஸ்துவின் அனைவருக்கான மீட்பின் பாடுகள் தம் தன்மையை இழந்து விட்டன என்பது பொருளாகும். மாறாகசமுதாய பிரச்சினைகளை உற்றுநோக்கி சமுதாயத்திற்காக உழைக்க அவை நம்மைத் தூண்டவேண்டும். துன்பம் என்பது கடந்த கால, நிகழ்கால அனுபவமாக இருந்தாலும், எதிர்கால (eschatology) இறையாட்சியின் தன்மையை உள்ளடக்கியுள்ளது.

அத்தகையதொரு காட்சிக்குரிய நாயகன் கிறிஸ்துவின் காலடிச் சுவட்டில் உதித்த இலட்சியவாளர்கள் நாம். நம்முடைய மனித நேயத்திலே அவரது மலர்முகம் தெரிய வேண்டும். நம்முடைய சிறிய, பெரிய தியாகங்களில், அவரது தெய்வீகம் விளங்கவேண்டும். சாதி, மத, பேதமற்ற நம் அன்பிலே அவரது இதயத் துடிப்புகள் நமக்கு கேட்க வேண்டும்.

## மனசு நோகாமல் ஒரு கல்யாணம்

சிறுகதை

★ க. அருள்நேசன்
குருநகர், யாழ்ப்பாணம்.

''ஊரை அடைச்சுப் பந்தல் போட்டுக் கல்யாணத்தை அமர்க்களம் பண்ணியிருக்கிறீங்க, மகள் கல்யாணம் என்றால் சும்மாவா?,'' என்று நண்பர் ஒருவர் சொல்ல ......

''இதெல்லாம் பெரிசில்லீங்க, இந்தக் கல்யாணம் யார் மனசும் நோகாமல் நடந்தா போதும்,'' என்று சொல்லிக் கொண்டு நடந்தார் அன்ரனி.

சாப்பாட்டுப் பந்தியிலே யாரோ இரசம் கேட்டார். இப்போதுதானே ஊத்தினனான் என்று சொன்ன நவேலைக்காரனைப் பார்த்து ''நல்லா போதும் என்கிற அளவிற்கு ஊத்து'' யார் மனசும் நோகாமல் பார்த்துச் சரிவர செய் என்று விரட்டலானார்.

மேளக்காரன் வந்தான். ஐயா ஐந்நூறு ரூபாய் பேசியிருந்தீங்க......

கூடவே தருகின்றேன். சந்தோசமா வாங்கிக்குங்க, மனசு நோகாமல் இருந்தால் போதும்......

என் செருப்பைக் காணோமே...... யார் தூக்கிட்டுபோனாங்களோ ...... என்று அங்கலாய்ந்துக் கொண்டிருந்தார் ஒருவர். அவரிடம் நூறு பாய்தாளை நீட்டிய அன்ரனி புதுச் செருப்பு வாங்கிக்குங்க. சந்தோசமாக போயிற்று வாங்க என்றவர் மணமகள் மாலதி இருந்த அறைக்குச் சென்றார்.

மாலதி மட்டும் தனியே இருக்க, அவள் கண்களில் நீர் உருண்டு கொண்டிருந்தது. ''ஏன்டி நீ இன்னும் அவனை மறக்கவில்லையா? கண்ட பயலுக் கெல்லாம் உன்னைக் கட்டிக் கொடுக்க என்னை என்ன மடையன் என்றா எண்ணி விட்டாய்? நான் பார்த்த மாப்பிள்ளைக்கு என்ன குறைச்சல். மரியாதையாக கண்ணை துடைத்துக்கிட்டு வேண்டிய வேலையைப் பாரு ... ம் ...'' சத்தம்போட்டுவிட்டு வெளியே போனார் அன்ரனி.

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

## இன்று வேதசாட்சிகளின் யுகம் ஆரம்பமாகி விட்டதா?

★ பணிவளன்

### 2. உலக குருட்டாட்டத்தில் ஏமாறாதிருப்போம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சென்ற வருடத் தொடக்கத்திலே பாப்பிறை எழுதிய (THE SPLENDOUR OF TRUTH) ''உண்மையின் மேன்மை'' என்ற சுற்று நிருபத்திலே இன்றைய ஜனநாயகத்திற்கும் சூழ்நிலை சார்ந்த ஒழுக்கவியலுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தை மனித விடுதலைக்கும், மாண்புக்கும் எதிரான சர்வாதிகார உறவு எனக்குறிப்பிடுகிறார். நவீன அரசியல் கலாசாரம் பெருவாரியாக உற்பத்தி பண்ணும் இப்புதிய ஆபத்தான ஒழுக்கவியல் மேற்கிலும், திருச்சபையின் இறையரசினதும் நற்செய்தி வாழ்க்கை முறைக்கு பயங்கரமான சவாலாக அமைகிறதை சுட்டிக்காட்டுகிறார். முன்பு சுதந்திரமாக வளர்ந்த மானிட சமூகங்கள் இன்று ஆட்சி செலுத்துகின்ற ஆட்சியமைப்புக்களாலே அவை மக்கள்மேல் சுமத்தும் வரிகள் மூலமும் மாபெரும் பணப்பலமுள்ள சர்வதேச முதலாளித்துவ முதலைகளின் அழுங்குப் பிடியில் முன்பு குடும்பத்திற்கே தனித்துவமாக இருந்த உரிமைகளைப் பறித்துக்கொள்கின்றன. ஒரு புறம் அவர்கள் கொடுக்கும் சர்வதேசக்கடன்களும் உதவிகளும், கல்வியைத் தரமுயர்த்துவதாகவும் தனி மனிதனுக்குச் சுபீட்சவாழ்வும் விடுதலையும் வாக்குப்பண்ணி மறுபுறத்தில் ஆயுத உற்பத்தி, மூன்றாம் மண்டல நாடுகள், போர், கருக்கலைப்பு, சிசுக்கொலை, பாலியல் இலக்கியக் கலைவடிவங்கள், இயலாதவர்களின் இயல்புக்கொலைகளையும் ஊக்குவிக்கின்றன. இவையெல்லாம் இன்று பலரால் நீதிப்படுத்தப்படுகின்றன. அரசும் அல்லது ஆளும்வர்க்கமும் அதன் பிரச்சார இயந்திரம் திணிக்கும் மதிப்பீடுகளுமே இன்று எல்லார்வாழ்க்கையையும் நிர்ணயிக்கின்றன. இவ்வரசியல் வாதிகளின் இப்போக்கை முன்னேற்றமென்ற விருதுவாக்கின் கீழ் எல்லோரும் ஏற்று தங்கள் வாழ்வை நிர்ணயிப்பதை நாம் காண முடிகின்றது. கடந்த 10, 15 வருடங்களாக இந்த மாற்றம் எம்மண்ணிலும் பற்றிப் படர்ந்து ஒரு இரட்டை வாழ்க்கைமுறையை எவ்வித சஞ்சலமுமின்றி பூண்டுகொள்வதற்கு உதவுகிறது. இதன் நிமித்தம் மனித அநீதியும் துன்பமும் மனித இதயத்தில் கிடக்கும் பாவத்தின் விளைவாக இராது சமூக அரசியல், பொருளாதாரக் காரணிகளால் ஏற்படுகிற ஒன்றாக காட்டுகின்றது. பொய், களவு, காமம், கொலை ஒரு போதும் அனுமதிக்கப்படமுடியாது என்ற திருச்சபையின் படிப்பினையை இன்று அரசியல் புறம்பே தள்ளிவிட்டு இன்று மனித முன்னேற்றத்திற்கும் எல்லையற்ற இன்பத்திற்கும் கலை, விஞ்ஞானம், மருத்துவம், தொழில்நுட்பம் முதலானவற்றிற்கு இவ் ஒழுக்கவியல் இடையூறாக இருக்குமென்ற எண்ணத்தைப் புகுத்துகின்றது. இப்பொய்மையின் விளைவுகளை விஞ்ஞான அதிநுட்பத்தின் ஊடாக முன்னேற்றம் கண்ட நாடுகளின் பயங்கர அழிவுகளையும், கொலைகளையும் நாசி ஆட்சிகளின் கீழும் ருஷ்ய, மாக்சிய ஆட்சியாளர்களின் ''குலாக்'' என்று சொல்லப்படும் பாரிய வதை முகாம்களின் பின்னணியில் கூட உலகம் உணராதது ஆச்சரியத்திற்குரியதொன்றாகும். இன்று அரசுகள் ஆளுநர்களும் மக்களை தங்கள் சாயலிலும், பாவனையிலும் உருவாக்க முற்படுகின்றனர். சிசுக்கொலை, வலுவிழந்தோர் கொலை. சுயவிருப்பத்திற் கொலைகளை மேற்கொள்ள சுதந்திரத்தை அல்லது விடுதலையைக் கொடுப்பதாக வாக்குப்பண்ணும் அதே சக்திகள் ஊக்குவிக்கிறதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கின்றது. திருச்சபை மனித இயற்கை நெறிகளை அளவுகோலாக வைத்து ஆபத்து என்று எச்சரிக்கும் அதே செங்குத்தான மலைநுனிகளில் ஆளுநர்கள் கொண்டுபோய்க் கீழே பாயும்படி ஊக்குவிக்கின்றனர்.

### 3. நற்செய்தியின்படி வாழ்வோம்

இச்சூழ்நிலையிலே தான் திருச்சபையானது அதன் நற்செய்தி வாழ்க்கை (முறையை) நெறியை திரும்பவும் கத்தோலிக்கர்களுக்கு முன்வைக்கின்றது. உலகத்தோடு ஓட்டிப் போய் பாதாளத்தில் விழுந்து விடப்போகும்மனுக்குலத்தைத் தடுத்து நிறுத்த திருச்சபையில் பல நவீன வேதசாட்சிகள், தேவைப்படுகின்றனர், கிறிஸ்து அந்த இளம் பணக்கார இளைஞனுக்குக் கொடுக்க விழைந்த அப்புதிய விடுதலையை அறை கூவ வேண்டும். இறைவனையும் அயலவனையும் நேசிக்கின்ற கட்டளைக்கு மனிதன் வரையறைபோட முடியாது. இயற்கைச்சட்டத்தை உதாசீனம் செய்யும் நவீன மனிதனின் கால்கள் அதற்கு முரண்பட்டு பாய்ந்தால் கற்களில்முட்டி உடைந்து விடுவான் என்கின்றார். இதை எங்கள் ஆன்மீக வழிகாட்டிகளும் அரசியலற்ற பிரத்தியேக தெய்வீகத்திற்குள் தங்களை மறைத்துக்கொள்ளாது வீழ்ந்துவிட்ட இவ்வுலகினை புதிய நற்செய்திப்பணியை அறிவிக்க முயலும் துணிவைக் கொடுக்க வேண்டுமென்று பாப்பரசர் தன் ஆசிய நாடுகளின் அண்மை விஜயத்தின் போது ஆயர் தம் தவக்கால சுற்று நிருபத்தில் குறிப்பிடுவதுபோல மேய்ப்புப் பணி மாநாடு முன்வைத்த கருத்துகளுக்கு இணங்க மறைமாவட்ட ஆணைக்குழுக்களையும் பக்திச்சபைகளையும் புனரமைக்கும் பணி துரிதமாக நடந்து கொண்டிருக்கும் இவ் வேளையில் வெறும் ஆட்சேர்ப்புக்களோடு மட்டும் நின்றுவிடாது மேலே சுட்டிக்காட்டிய தன் பிரகாரம் விசுவாச விழிப்பின் தரத்தை உயர்த்துவதிலும்ஈடுபடவேண்டியதுமுக்கிய கடமையாகும். இதையே யோசேவ் வாஸ் முனிந்திரனின் முத்திப்பேறுபெற்றபட்ட நிகழ்வும், பாப்பிறையின் வருகையும் நினைவூட்டி நிற்கின்றன.

# காவலன் கண்மணிகள்

ஒளி: 9 | எம் விழிகளின் ஒளி யேசு
சுடர்: 7 | எம் வாழ்வின் வழி யேசு

## பாடுகள் பயன்தரும்

மண்ணைக் கொத்தி, புரட்டி உரம் இட்டால்
மண் வளம் பெறும்!
பொன்னைச் சுட்டு உருட்டி எடுத்தால்
மின்னிடும் பொன்னகை வரும்!
மாணிக்கத்தை வெட்டி பட்டை தீட்டினால்
ஒளிதரும் கற்கள் கிடைக்கும்!
சந்தனத்தை நீரிட்டு உரைத்துப் பூசினால்
அழகுடன் மணம் வீசும்!
பாடுகள் பட்டு கல்வி கற்றால்
சுயமான உயர்வான வாழ்வு உழைத்தால் கிட்டும்.
அன்புக்கண்மணிகாள்!
இறை யேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு
எம்மை இனிய மனிதராக என்றும் வாழ வழிகாட்டும்.
இது உண்மை! இது சத்தியம்!!

அன்பின், **அன்பு விழி**

## காவலன் களஞ்சியம் 1995

### பார்வை 1

வினாக்களுக்கான விடைகள் இதழ்கள் ( 1, 2, 3 )இல் உண்டு.

1. ஜனவரியில் முத்திப் பேறு பெற்றவர்களுள் வயதில் குறைந்தவர் யார்?
2. இவ்வாண்டை சர்வதேச சகிப்புத்தன்மை ஆண்டாகப் பிரகடனப் படுத்திய நிறுவனம் எது?
3. யாழ்ப்பாண மறைமாவட்டத்திலுள்ள கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை எவ்வளவு?
4. திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் 264வது பாப்புவாக எப்பொழுது தெரிவு செய்யப்பட்டார்?
5. கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியினால் வெளியிடப்படும் அரையாண்டு இதழின் பெயர் என்ன?

வினாக்கள் தொடரும் விடைகளை அறிவிக்கும்பொழுது அனுப்பவும்.

அன்பு விழி

## மனசு நோகாம...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

சற்று நேரத்திற்கு முன்பு யாரிடமோ அன்ரனி வெளியே சொல்லிக்கொண்டிருந்ததை மாலதி கேட்டாள். "யார் மனசும் நோகக்கூடாதுங்க. அது தான் என்னுடைய பாலிசி."

இதைப்போல எம்மில் பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பல பக்திச் சபைகளில் இருந்து கொண்டு ஊருக்கு பல உபதேசங்களை சொல்லிக் கொண்டு இறைவனுக்கு ஏற்புடைய அன்பு, மன்னிப்பு என்பன அற்ற நிலையில் உள்ளனர். இனியும் இந்த வெளிவேட வாழ்க்கையை விட்டு பிறர் அன்பு, மன்னிப்பு என்ற காரியங்களில் ஈடுபட்டு வாழ்வார்களா?

## உத்தமரின் உயிர்ப்பு

கல்லறை திறந்தது
பேரொளி உதித்தது
ஆணவம் அழிந்தது
அன்பு மலர்ந்தது

கொடுமைகள் பல
புரிந்து போதையில்
மிதந்தோரை உத்தமர்
எழுப்புகின்றார்

அடிமை விலங் கொடித்த
மன்னவனை நம்
உள்ளங்களிலும்
இல்லங்களிலும்
ஏற்றிடுவோம்.
உயிர்த்தவரின்
உயிர் மூச்சால்
புத்துயிர் நாமும்
பெற்றிடுவோம்

வாடி நிற்கும்
எம் சமுதாயத்தில்
அன்பின் அரசை
நிலை நாட்டிடுவோம்

சத்தியத்தின் உயிர்ப்பால்
சவால்களை வென்று
சமாதானத்தின்
தூதுவராய் மாறிடுவோம்

S. G. றூப வசந்தினி
கோப்பாய், வடக்கு.

திருத்தந்தையின் ★ அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

## இறையியல் சிந்தனைகளும் இடைவிடாத பயணங்களும்-13

திருத்தந்தை உணர்ச்சி பொங்க பேசி முடித்தவுடன் "போலந்து நாட்டு போப்பானவர்", "கிராக்கோ நகரத்துப் போப்பு" என்று மக்கள் மகிழ்ச்சியால் கத்தினார்கள்.

மக்கள் வெள்ளத்தைப் பார்த்து தன் முதல் சந்திப்பிலேயே திருத்தந்தை உரையாற்ற ஆயத்தமானார். அவரைப் பேச விடாது தடுக்கப் பலர் முயன்றனர். அவரோ அங்கிருந்த அனைவரின் உள்ளங்களும் நெகிழும் வண்ணம் பேசத் தொடங்கினார்.

"உங்களுடைய — இல்லை இல்லை—நம்முடைய இத்தாலிய மொழியில் எனக்கு வழமாகப் பேசத் தெரியவில்லையென்றால் அதைத் திருத்த வேண்டியது உங்கள் கடமே" என்று சொன்னதும் அனைவர் மனங்களும் குளிர்ந்தன.

அந்த அன்பு வெள்ளத்தில் மிதந்த ஒரு சியாட்டி "அவர் அன்னியராக இருந்தால் என்ன? நம் தாய் மொழியை அல்லவா பேசுகிறார்" என்று சத்தமாகச் சொன்னாள்.

கங்கேரியில் இருந்து கனடா தப்பிச் சென்ற ஒரு கைதி "கத்தோலிக்கனாக இருப்பதற்காக கொடுமைகளுக்குள்ளானவன் நான். இருயபுத்திரை நாடுகளில் உள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நற்செய்தியாக உள்ளது இந்த தேர்தல். விசுவாசத்திற்காகத் துன்புறும் மக்களுக்கு இவர் நிச்சயம் ஏதாவது செய்வார்," என்றான்.

ஓர் இத்தாலிய வாலிபன் நாலரை நூற்றாண்டுகளுக்குப் பிறகு சுத்தமான காற்று கிடைத்துள்ளது. புதிய திருத தந்தை இத்தாலிய அரசியலில அதகம ஈடுபடமாட்டார்" என எதர்பார்க்கிறேன என்றான்.

தாம் திருத்தந்தையாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பின் அவர் கருதினால்மார்களுக்குக் கூறிய வசனங்கள்,

"நானூறு ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்து விட்ட ஒரு மரபை மாற்றுவது எளிதன்று. இத்தாலியரல்லாத ஒருவரை நீங்கள் தேர்ந்தெடுப்பது வியப்புக்குரியதே. விசுவாசத்தின் விளைவான நன் முயற்சிதான் இது. இதற்கு எவ்வளவோ மனத் துணிவு இருந்திருக்க வேண்டும்."

திருத்தந்தை வத்திக்கான் நகரின் கைதி அல்ல என்பதைத் தேர்தல் நடந்த நாளே நிரூபித்தார். அன்று மாலை போலாந்து ஆயர் ஒருவரை உரோமையில் உள்ள மருத்துவ மனைக்குச் சென்று நலம் விசாரித்தார்.

"இராயப்பர் இத்தாலியர் அல்ல. ஆனால் அவரே கத்தோலிக்க திருச்சபையின் முதல் திருத்தந்தையானார். திருச்சபை வளர தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் தந்தார். அதுபோல நானும் இத்தாலியன் அல்லாவிடினும் திருச்சபையின் வளர்ச்சிக்காக இறைவனின் அருள் வழியில் நடப்பேன்" என்று கூறினார்.

தேர்தல் முடிந்த கையோடு போலாந்து திரும்பத் திட்டம் போடப்பட்டிருந்தது. இப்போ, தான் இனி போலாந்திற்குப் போக முடியாது என அறிந்தவராக, தம் மாளிகைக்குப் போன் எடுத்தார்.

"அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்" திருத்தந்தை கேட்டார். "நாங்கள் கண்ணீர் வடுகின்றோம்" என்று பதில் வந்தது.

"அப்படியானால் ரோமிற்கு வாருங்கள். ஒன்றாகவே கண்ணீர் வடுவோம்."

(வளரும்)

### 6ஆம் ஆண்டு நினைவு



திரு. அ. சிப்றியன்

அன்னையின் மடியில் 26-09-1908 — ஆண்டவன் ஒளியில் 10-04-1989

சீவியத்தில் உம்மை
நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்"

இவரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக 10-04-1995 திங்கட்கிழமை காலை 5.45 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

குடும்பத்தினர்
35/2 பழைய பூங்காவீதி,
யாழ்ப்பாணம். A/16/95

### 31 ஆம் நாள் நினைவு



மரியாம்பிள்ளை
செபஸ்தியாம்பிள்ளை
(தம்பிஐயா)

மலர்வு 20-01-1913 — உதிர்வு 09-03-1995

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"
அரு 11 : 25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 08-04-95 சனிக்கிழமை பிற்பகல் 5-00மணிக்கு தும்பளை புனித மரியன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நடைபெறும்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பீட்டன்.

மாரீசன்கூடல்,
மாதகல். A/15/95

### 16 ஆம் நாள் நினைவு



அருட்சகோதரி
மேரி அலெக்சிஸ்
மனுவேற்பிள்ளை

மலர்வு 02-08-32 — உதிர்வு 23-03-95

ஆண்டவனுக்குத் தன்னை அர்ப்பணித்து அந்த ஆண்டவனுக்காக முழுமையாகச் சேவை செய்து துறவற வாழ்வில கற்பு, தரித்திரம், அமைச்சல் என்ற மூன்று சத்தியத்திற்கும் அடிபணிந்து உயிர் மூச்சுவரை உழைத்து உயிர் விட்ட எங்கள் அன்புச் சகோதரியின் ஆன்மா, தெய்வமே உன் காலடியில் வந்து களிகூர வேண்டுமென மன்றாடுகிறோம்.

சகோதரிமார், சகோதரர்,
தி. கு. கன்னியர்கள்,
உற்றார், உறவினர்,
கல்வியங்காடு A/17/95




சித்திரக் கலைஞர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

தொடர்பு சாதன ஆணைக்குழு நடாத்தும்

**சித்திரப்படக் கதைப் போட்டி**

யாழ் மாவட்ட தொடர்பு சாதன ஆணைக்குழு நடாத்தும் சித்திரப்படக் கதைப் போட்டியில் எல்லோரும் கலந்து கொள்ளலாம். சிறப்புப் பரிசுகளுடன் தெரிவு செய்யும் படக்கதைகள் பிரசுரித்து வெளியிடப்படும்.

கரு : கிறிஸ்தவ விழுமியங்களைக் கொண்டதாக கருக்கள் இருக்க வேண்டும்.

அளவு : 10" 16" — ( ¼ ) அளவு கொண்ட நான்கு பக்கங்களுக்குள் அதிக சித்திரப்படங்களுடன் வசனங்களும் அமைத்தல் வேண்டும்.

சிறந்த படைப்புகளுக்கு !
1ஆம் பரிசு ரூ. 1500/= 2ஆம் பரிசு ரூ. 1000/=
3ஆம் பரிசு ரூ. 500/=

மேலும் பிரசுரத்துக்குத் தெரிவாகும் சித்திரப் படக் கதைகள் ஒவ்வொன்றிற்கும் ரூபா 500/= வழங்கப்படும்.

உங்கள் படைப்புக்களை 15-05-1995க்கு முன் அனுப்பி வைக்கவும்.

செயலாளர்
தொடர்பு சாதன ஆணைக்குழு,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.


## நெடுந்தீவு,...

(10 ஆம்பக்கத் தொடர்ச்சி)

ஆயர் அவர்களால் அங்கு அவதானிக்க கூடியதாயிருந்தது.

ஒரு சமூகமான சூழ்நிலை உருவாகி, யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள தங்கள் உறவினர் இனசனரை சந்தித்து உறவாடும் வாய்ப்பு கூடிய விரைவில் உண்டாக வேண்டுமென்ற அவா மக்கள் இதயங்களில் தேங்கி நிற்பதையும் ஆயர் உணரக் கூடியதாயிருந்தது.

## இலங்கையில் சமாதான தீர்வு காண விடாப்பிடியாயிருங்கள்

❊ திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் நாட்டில் நீண்ட நாளாக இருந்துவரும் இனப் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு இலங்கையில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் முக்கிய நடவடிக்கையான பேச்சுவார்த்தைகுறித்து தமது கரிசனையையும் அக்கறையையும் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதிக்கும், இலங்கைக் கத்தோலிக்க ஆயர் பேரவைக்கும் அனுப்பிய செய்தியில் திருத்தந்தை 2 ஆம் அருள் சின்னப்பர் ஒரு புத்துணர்வு பெற்ற நல்லெண்ணம் மேலோங்க வேண்டுமெனக் கூறுகிறார். கடந்த ஜனவரி மாதம் அவர் கொழும்புக்கு வந்தபோது வேண்டியது போல அண்மைக் காலத்தில் நாட்டு மக்களின் வாழ்வை ஊறுபடுத்திய இனப் பிரச்சினைக்கு நீதியும் சமாதானமுமான ஒரு தீர்வு காண்பதில் நல்லெண்ணமுடைய இலங்கையர் எல்லோரும் உறுதியாகவும் விடாப்பிடியாகவும் இருக்க வேண்டுமெனக் கோருகிறார்.

''அத்தகைய ஒரு முயற்சிக்கு சகல வன்செயல்களையும் நிறுத்தி, நீதியையும், சமாதானத்தையும் மீண்டும் ஏற்படுத்தி, இணக்கத்தையும் சமரசத்தையும் கொண்டுவர வேண்டுமென்ற உறுதியான அவாவுடன் கூடிய பெருந்தன்மை இடைவிடாது தேவைப்படுகிறது.''

அவர் எமது நாட்டிலிருந்து விடைபெறும் வேளையில் கூறியவற்றை மீண்டும் நினைவுபடுத்துகின்றார். அப்போது அவர் வற்புறுத்திக் கூறியதாவது: ''கடந்த சில ஆண்டுகளாக இலங்கையரின் வாழ்வுக்குக் கேடு விளைத்த இப் போராட்டத்துக்கு நீதியான ஒரு தீர்வைக் கண்டடைவதில் தொடர்ந்து முயற்சி செய்யுமாறு அரசாங்கத்தையும் சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்'' கடவுள் முன்னிலையிலும் மக்கள் முன்னிலையிலும் தமக்குள்ள மாபெரும் பொறுப்பை அவர்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளவேண்டுமென அவர் இறைவனைப் பிரார்த்திக்கிறார்.

## பேச்சுவார்த்தைகள் தொடரட்டும் கையொப்ப சேகரிப்பு இயக்கம்

இனப்பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்கு இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் எவ்வித இடையூறுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டுமெனும் மக்களின் ஏகோபித்த விருப்பத்தை தெரிவிக்கும் வண்ணம், இலங்கையிலுள்ள ஒவ்வொரு மறை மாவட்டத்தின் சகல பங்குகளிலும் ''கையொப்ப சேகரிப்பு இயக்கம் செயற்பட வேண்டுமென அண்மையில் கொழும்பில் நடந்தேறிய இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## இலங்கை ஆயர்களின் வேண்டுகோள்
## பெரிய வியாழன் திருமணித்தியாலம்

எதிர் வரும் பரிசுத்த வாரத்தின் பெரிய வியாழன் —13-04-95— அன்று ஆண்டவரின் இரவு உணவு விழா மாலைத் திருப்பலி முடிந்த பின் இடம் பெறும் நற்கருணை ஆராதனை வேளையில், அதன் முதல் ஒரு மணி நேரத்தை பிரத்தியேகமாக ஒதுக்கி, எமது நாட்டில் அமைதி, ஒற்றுமை நிலவுவதற்காகவும், இனப் பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வு காண்பதற்காகவும் செபிக்குமாறு, இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றம் நாட்டில் வாழ் சகல கத்தோலிக்க மக்களைக் கேட்டுள்ளது.

எனவே ஒவ்வொரு மறை மாவட்ட ஆயர்களுக்கும் தத் தமது மறை மாவட்ட சகல ஆலயங்களிலும் இத்தினத்தில் குறித்த திருமணித்தியாலத்தை இந்நோக்கத்திற்காக ஒழுங்கு செய்யுமாறு சகல பங்குத் தந்தையர்களையும் வேண்டி நிற்கின்றனர்.

## குருத்துவ வெள்ளி விழா

அருள்திரு
யேம்ஸ் பத்திநாதர்
06-04-1995



காவலனின் அன்பும்
தமிழ்ப்பண்பும் நிறை
வாழ்த்துக்கள்!

## யாழ் குடாநாட்டில் கொழும்புத் துணை ஆயர்

கொழும்பு தலைமை மறைமாவட்டத்துணை ஆயர் மேதகு மல்கம் றஞ்சித் ஆண்டகை யாழ் குடா நாட்டு மக்களின் இன்னல்களை நேரில் கண்டறிய கடந்த புதன் 6-4-95 அன்று அதி காலையில் கிளாலிக் கடல் ஏரியூடாக யாழ் நகர் வந்தடைந்தார்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றத்தினால் நீதி சமாதான ஆணைக் குழுவுக்கு புதிய தவிசாளராக அண்மையில் நியமனம் பெற்ற ஆயர் இவர்,யாழ் கத்தோலிக்க மக்களுக்குப் புதியவரல்லர். ஆயராக நியமனம் பெறமுன் திருப்பாலத்துவ சபையின் தேசிய இயக்குநராக இருந்த வேளையில் பலதடவைகளில் யாழ் மறை மாவட்ட திருப்பாலத்துவ சபைச் சிறுவர்களையும் அவர்களின் வழிகாட்டிகளையும் சந்தித்து அவர்களை நெறிப் படுத்தியதுடன். இவர் தமிழ் மக்களின் தேசிய உணர்வையும் புரிந்துணர்வுடன் மதித்தவராவர்.

இருநாள் பயணத்தை மேற்கொண்ட ஆயர் மல்கம் றஞ்சித் பல்வேறு தரப்பினரைச் சந்தித்து உரையாடி, மக்களின் அபிலாசைகளை அறிவதில் அதிக ஆர்வமும் அக்கறையும் காட்டியுள்ளார்.

கொழும்புத் துணை ஆயருடன், கொழும்பு தலைமைமறை மாவட்ட ஆயர்பதிலாள் அருள்திரு பிளசிடஸ் டி சில்வாவும், அருள்திரு. மேவின் ஜயகொடியும் வருவதற்கு ஏற்பாடுகளை அருள்திரு A. அலெக்ஸ்சாண்டர் S.S.S. மேற்கொண்டார்.

## 1995 — 1998 ஆண்டுகளுக்கான ஆயர் மன்ற புதிய நியமனங்கள்

தலைவர் — அதிவந். வியான்னி பெர்னாண்டோ.
துணைத் தலைவர் — அதிவந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை.
பொதுச்செயலர் — அதிவந். மல்கம் றஞ்சித்.
துணைப் பொதுச் செயலர் — அருள்திரு பிளசிடஸ் டி சில்வா.
நிர்வாகக் குழு — அதிவந். வியான்னி பெர்னாண்டோ,
அதிவந். கிங்ஸ்லி சுவாம்பிள்ளை,
அதிவந். மல்கம் றஞ்சித்,
அதிவந். றேமண்ட் பீரிஸ்,
அதிவந். இராயப்பு யோசவ்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்)

## அரசியல் பிரமுகர்களுடன் யாழ் ஆயர் சந்திப்பு

அண்மையில் கொழும்பில் நடந்த இலங்கை கத்தோலிக்க ஆயர் மன்றக் கூட்டத்திற்கு சமூகமளித்த யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அங்கிருந்த பொழுது இலங்கை அரசியல் பிரமுகர்களுடன் உரையாடல் நடத்தினார். பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையையும், பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவையும் ஒரு மணி நேரமளவில் சந்தித்து,இனப்பிரச்சினை குறித்தும் வடக்குக்கிழக்கு மக்களின் அன்றாட தேவைகளை நிறைவு செய்வதைப் பற்றியும் உரையாடி இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்தும் பேச்சு வார்த்தைகளை நடாத்துவதின் அவசியத்தை வலியுறுத்தினார்,

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## அனலைதீவில் ஒரு புதிய ஆலயம்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தீவுகளுக்கு அண்மையில் மேற்கொண்ட தபக்கால மேய்ப்புப்பணி விஜயத்தின் போது, அனலைதீவில் அமைக்கப்பெற்ற புதிய கோவிலை அன்னை வேளாங்கன்னி மரியாளின் பாதுகாவலுக்கு அர்ப்பணித்து அதில் திருப்பலி நிறைவேற்றினார். அங்கு பணியாற்றும் பங்குத் தந்தை அருள்திரு யூஜின் பிரான்சிஸ் சகல ஒழுங்குகளையும் செய்தார்.

## அமைதியின் அரசர் அமைதி அநுபவத்தை அருள்வாராக!

பாவத்தினால் உண்டான பிரிவினையைப் போக்க உள்ளங்களைத் தூய்மைப்படுத்தி இறைவனை அணுகுவோமானால், உண்மையான நிரந்தரமான சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியுமென்று, யாழ் பேராலயத்தில் வியாழன் (6.4.95) காலை திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரை ஆற்றிய கொழும்புத்துணை ஆயர் மல்கம் றஞ்சித் கூறினார்.

ஒரு யாத்திரிகனாக, தான் யாழ். குடாநாட்டிற்கு வந்திருப்பதாகவும், மக்களின் துன்பங்களில் பங்கெடுத்து சமாதானத்தை உருவாக்க தன்னால் ஆன முயற்சிகளை தென் இலங்கையில் மேற்கொள்ளப்போவதாகவும் கூறிய ஆயர், தமிழ்மக்கள் பாரிய நெருக்கடிகள் மத்தியில் இறைவனுக்குப் பிரமாணிக்கமாயிருந்து செயல்படுவதைக் கண்டு தான் ஆச்சரியப்படுவதாகத் தெரிவித்தார்.

''இறைவன் ஒரு புதுமை புரிவார். சமாதானத்திற்காகச் செபியுங்கள். அமைதியின் மன்னன் நீங்கள் அமைதியை அனுபவிக்க அருள்வாராக'' என ஆசிகூறி ஆயர் தனது மறையுரையை நிறைவு செய்தார்.

## இறை இரக்கப் பெரு விழா

இப் பெரு விழா உயிர்ப்பு விழாவை அடுத்துவரும்ஞாயிற்றுக்கிழமை திருநாளாகக்கொண்டாடப்படுகிறது. இவ்வருடம் இத்திருவிழா சித்திரைத்திங்கள் 23ஆம் நாள் வருகிறது.

இப் பெருவிழாவுக்குரிய நவநாள் 14-04-95பெரியவெள்ளிக்கிழமை பி. பகல் 3 மணிக்கு ஆரம்பமாகின்றது.

## நெடுந்தீவு மக்களின் எதிர்பார்ப்பு

கடந்த மாதம் 22 ஆம் திகதி நெடுந்தீவுக்கு சென்ற யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், தற்காலிகமாக திருமறைப் பணியாற்றுவதற்கு அருள்திரு G.அருள்நேசன் அவர்களை அப்பங்கில் அமர்த்தியதுடன், அங்குள்ள பள்ளிப் பிள்ளைகளையும் ஆசிரியர்களையும் சந்தித்து உரையாடினார்.

தற்பொழுது இடம் பெறும் நாட்டின் சமாதானத்திற்கான முயற்சிகள் வெற்றியளிக்குமெனும் மக்களின் நம்பிக்கையுள்ள எதிர்பார்ப்பையும்

(தொடர்ச்சி 9ஆம் பக்கம்)

## நயினாதீவில் யாழ் ஆயருக்கு வரவேற்பு

இந்து மதத்தினர் பெரும்பாலானோராகக் கொண்ட நயினாதீவில் யாழ் ஆயர் அவர்களுக்கு அங்குள்ள மக்கள் சமய பாகுபாடின்றி பெருந்திரளாய் சமூகமளித்துஅமோக வரவேற்பளித்தார்கள். கடற்கரையில் திரண்டிருந்த மக்களுக்கு சமாதானத்திற்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு முயற்சிகளைக் குறித்து உரையாற்றிய ஆயர், அவ்விடத்தில் புனித அந்தோனியார் சுரூபம் ஒன்றை ஆசீர்வதித்து. நிறுவியதுடன், அத்தீவில் அமைக்கப்பெற்ற சிற்றாலயம் ஒன்றையும் ஆசீர்வதித்தார்.

## எழுத்தாளர்களே!, ஆர்வலர்களே!!

உங்கள் படைப்புக்களையும் உங்கள் அனுபவத்தினையும் பகிர்ந்து கொண்டு ஏனையவர்களுக்கும் அறிமுகப்படுத்த தொடர்புசாதன ஆணைக்குழு முன்வந்துள்ளது. இவற்றிற்கான சந்திப்பிலும் கலந்து கொள்ள உங்கள் படைப்புக்கள் வெளிவந்த நூல்கள், கையிருப்புக்கள் முதலிய விபரங்களை எமக்கு எழுதி தொடர்பை ஏற்படுத்துங்கள்.

நூல்களின் விற்பனை, வெளியீடு, அறிமுகம், கருத்துப் பரிமாற்றம் போன்றதற்கான கலந்துரையாடலுக்கும் உங்கள் கருத்துக்களையும், முகவரிகளையும் 15,05 95 க்கு முன்னர் எமக்கு அனுப்பிவையுங்கள்.

உங்கள் பகுதியில் உள்ள படைப்பாளர்களை அறிமுகப்படுத்துவதுடன் தொடர்புசாதனப் பயிற்சிகளில் பங்கேற்க பங்குத்தந்தையருடன் தொடர்பு கொண்டு விண்ணப்பியுங்கள்.

இறுதிநாள் 15.05.95

தொடர்புக்கு
செயலாளர்
தொடர்புசாதன ஆணைக்குழு
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி இல360 க்கத்திலுள்ள அச்சகத்தில் 1995ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது